பதிவு எண். 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று



வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ளு ஆனி-மீ 5உ (19—6—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 8.

மின்சார ரசம்.

☞ மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபாற் சார்ஜ் வேறு.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

☞ மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது. மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவர்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒருவேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம். அப்படி அநேகர் உயிர் தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— **மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)** தந்திவிலாசம்:— "Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:- T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

நாலு தலைமுறை பரம்பரை பமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்த வைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தரதேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்தமருந்துகள்.

பழனி. சி. எம். சாமி

மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையிஞலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை அபாரதாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு. பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும் 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையைஎழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும் சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தருக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி.—நான் சிங்கப்பூரில் நீரழிவிஞல் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்குமிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சினேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பக்கோருகிறேன். கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா 16.

நற்சாட்சி:—தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை

சேலம்

சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்காக ஸ்பெஷலாய்

பட்டு ஜரிகை பேட்டுகளிஞல் தயார்செய்தகதர்.

நமது சொந்த தரிகளால் தயார் செய்யப்பட்ட நைஸ் நூலிஞல் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார்செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி நகங்களும் 45 × 5 ஜரிகைப்பேட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலம் பட்டு குண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார்செய்த 45×9 கெஜம் சில நகங்களும் ஜெமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும். அத்தாக்ஷி பத்திரம்.

ஸ்ரீமான் C. V. ஜெயகோபாலசெட்டியார் கைநூலால் கைதரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C. V. ஜெய கோபால செட்டியார்,
கதர் வியாபாரம், சேலம்

சுயமரியாதை உதயம்.

திருமணம்:—சோழவந்தான் பிரபல மிட்டாதாரும் மதுரை ஸ்ரீமான் பி. டி. ராஜன் அவர்களுடைய உறவினருமாகிய திருவாளர் ரெங்கநாத முதலியார் தனது குமாரன் சிரஞ்சீவி பாலகுருசாமி முதலியாரின் திருமணத்தின்போது பார்ப்பனரல்லாத புரோகிதரைக்கொண்டு நடத்திவைத்தார் என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஃ ஃ ஃ

திருமணம்:—சோழவந்தான் திரு. வெங்கிட்டராம முதலியாரும் தனது கல்யாணத்தை பிராமணரல்லாதபுரோகிதரைக்கொண்டே நடத்திஞர் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஃ ஃ ஃ

திருமணம்:—நிகழும் வைகாசி மாதம் 21 தேதி கோயம்புத்தூர் தாலூக வட்டமலைபாளையம் ஸ்ரீமான் நா. வெங்கிடசாமி நாயுடு அவர்கள் புதல்வி சௌபாக்கியவதி இலட்சுமி அம்மாளை டவுன் பாப்பநாய்க்கம்பாளையம் ஸ்ரீமான் நாராயணசாமி நாயுடு புதல்வன் சிரஞ்சீவி கேசவலு நாயுடுவுக்கும் நடந்த கல்யாண வைபவத்தின் போது பார்ப்பான் வந்தவனை வேண்டாமென்று சொல்லி தமிழ் மறை ஓதி மாங்கல்யதாரணம்செய்து பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பட்ட பின்னர் அவண் குழுமியிருந்த கூட்டத்தில் சடங்குகளில் பார்ப்பனர்களை நீக்கியே செய்து கொள்ள வேண்டும் எனும் பொருள் பட ஓர் தீர்மானத்தை ஸ்ரீமான் சி. அப்பாய் நாயுடு அவர்களால் பிரேரேபிக்கபபட்டு ஏக மனதாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஃ ஃ ஃ

திதி:—திருவண்ணுமலை தாலூகா தண்டராம்பட்டு கிராமம் மணியகாரர் 8-6-27 தியில் தன் தகப்பனுருக்கு திதி கொடுக்க வேண்டியதினம் வழக்கம்போல்பார்ப்பனன் வந்தவனை வந்த வழியே திரும்பச் சொல்லிவிட்டு தன் உள்ளூர், உறவினருக்கும் ஏழை மக்களுக்கும் விருந்தளித்து உபசரித்தாரென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

முன் விலை ரூ. 14. இப்போழுது ரூ. 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானுலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அவியல்.

5 பாகம்.

(கைவல்ய சாமியார் எழுதியது.)

சந்திரன்:— வருணாஸ்சிரமம் வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் யார் என்பதைக் கவனிப்போம் உள்ளது உள்ளபடி நான் உனக்குச் சொல்லுகிறேன். நான் சொல்லுவதின் நியாயா நியாயங்களில் உன் புத்தியைச் செலுத்திப்பார். பிராமணன் செய்வதும் நடப்பதும் வர்ணாசிரம தர்மத்திற்கு எந்தச் சாஸ்திரம் அடிப்படையாக நினைத்துச் சொல்லுகிறார்களோ அந்தச் சாஸ்திரத்திற்கே நேர் விரோதமாக இருக்கிறது. அதைத்தாங்கள் கொஞ்சங்கூட சட்டை பண்ணாமல் தங்கள் காரியத்தில் தங்கள் சுய நலங்களுக் கேற்றாப்போல செய்துகொள்ளுகிறார்கள். அந்த லாபங்களையும் தாங்கள் அனுபோகித்துவந்த பெருமைக்கும் பங்கம் வாராமலிருக்க மற்றவர்களை மௌடீகத்தில் வைத்து நடத்தவே வருணாஸ்சிரம தர்மம் வேண்டுமென்கிறார்களே அல்லாமல் அதில் யோக்கியம் இருக்கிறதா? தங்கள் சௌகரியத்திற்கு மற்றவர்களை அடிமைகொள்ள இம்மாதிரி பொய் சாஸ்திரத்தையும் கடவுளையும் முன்காட்டுவதைத்தான் "குடியரசு" பத்திரிகை கண்டிக்கிறது. இதை உணராமல் நீகூட பிராமணனையே "குடியரசு" குற்றஞ் சொல்லுகிறது என்று சொல்லுகிறாய். பிரிட்டிஷ் நீதியில் குற்றம் யாரும் கண்டுபிடிப்பதில்லை அதை நடத்துகிறவர்களிடமும் வியாக்யான கர்த்தாக்களிடமும் குற்றம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். முன்னோர்களால் வர்ணிக்கப்பட்டுள்ள உத்தம மனிதனைத்தான் பிராமணன் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பது "குடியரசுக்கு"த் தெரியும். யுக்திக்கு ஒத்துவராததும் ஞாயமில்லாததும் அடிமைத்தனத்தை உண்டுபண்ணுவதுமான கொள்கைகளைச் சமூகத்தில் நுழைத்துத்தான் பெரியவனாக மற்றவர்களை ஏமாற்றிவைத்திருக்கும் ஏற்பாடுகளிலுள்ள குற்றங்களைத்தான் குடியரசு கண்டிக்கிறது. வர்ணாஸ்சிரமத்தைப் பற்றி ஞாயமாகச் சொல்லுகிறேன் கேள். நியாயமென்றால் என்ன என்பதை உனக்கு முதலில் சொல்லுகிறேன். உலகத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பிரசித்தமாயிருக்கிற விஷயங்களை உதாரணமூலமாகக்காட்டி ச்சாஸ்திரத்தில் விரிவாகக்கூறப்பட்ட விஷயங்களை யுக்தி பூர்வமாக உலகத்தோடொத்து நாம் தெரிந்துகொள்வதற்கு உதவியாகவிருக்கும் வாக்கியங்களுக்கும் நியாயமென்று பெயர். இந்த நியாயக் கோர்வையேதான் தர்க்க சாஸ்திரம். தர்க்க சாஸ்திரத்தின் கொள்கையே தார்க்கீக மதம். தார்க்கீக மதத்தின் அஸ்திவாரத்தின் மேலே இந்து மதம் கட்டப்பட்டிருக்கிறது. பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், எனவருணம் நான்கு. பிர்மச்சாரி, கிரகஸ்தன், வானப்பிரகஸ்தன், சங்நியாசி என ஆசிரமம் நான்கு. அவரவர் வர்ணங்களில் அந்த ஆஸ்ரமத்தை அதது காலத்தில் அனுஷ்டிப்பதற்குத் தருமமென்னப்படும். முதல் வர்ணத்தானான பிராமணனிடமே சாஸ்திரமிருக்கிறது. சாஸ்திரத்தில் விதித்தவை அவர்களுக்குத் தெரியும். சாஸ்திரம் அவர்களுக்கே சொந்தம். அப்படியிருக்கத் தென்னாட்டிலிருக்கும் ஜாதிகளை சூத்திரன் என்று கற்பித்து இனியும் அடிமைகொள்ள ஆதிகாலந்தொட்டுச்செய்தமோ சடியானபுரட்டை நிலைநிருத்தம்செய்துவரும் அக்கிரமமான ஏற்பாட்டிற்கு வர்ணாஸ்சிரமம் வேண்டுமெனகிறார்களே ஒழிய முதல் வர்ணமென்று பெருமையே பேசிக்கொள்ளும் தங்கள் ஜாதியில் பிராமணனென்று பெருமையாக வகுக்கப்பட்ட ஜாதிக்குறிய விதிகளில் எதையாவது ஒன்றை அனுஷ்டித்து வருகிறார்களா? அநேககாலமாக அனுஷ்டித்து வந்திருக்கிறார்களா? பிராமண ஜாதியின் தர்மம் ஓதல் ஓதுவித்தல் வேள்விசெய்தல் செய்வித்தல் தானமேற்றல் கொடுத்தல் இந்த ஆறு தொழிலில் ஏதாவது பிராமணனுக்குண்டா? இங்கிலீஷும் பைபிளும் ஓதுதலாயிருக்கிறது. அந்தப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயத்தொழிலும் வக்கீல் வேலையும் உத்தியோகமும் ஓதுவித்தலாகவிருக்கிறது. வேள்விசெய்வதும் செய்விப்பதுமிந்தக் காலத்திலில்லை. தானம்வாங்கத் தக்கவர்களென்றும் பெரியோரைத்தாங்கி ஊர் ஊராய்ப் பிச்சை எடுத்து எமாக்கிருக்கிறவர்களே ஒழிய சற்பாத்திரமாவதுண்டா? கொடுத்தலென்பதைப் பாப்பானில் பார்ப்பது கஷ்டம் எல்லாருக்கும் எளிதில் கொடுக்கக்கூடுமான தண்ணீர்கூட பாப்பான் மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லையே; இது எல்லாருக்கும் தெரிந்த பிரத்தியக்ஷமல்லவா? ஆனால் இங்கிலீஷ் நாகரீகம் இதில் கொஞ்சம் சீர்திருத்தியிருக்கிறது என்றாலும் அதிலும் தங்களுக்கு ஏதாவது கார்யார்த்தமேற்படுவதாயிருந்தால்தான் கொடுப்பார்கள். கொடுத்தல் என்பது வேதத்தில் பிராமணனுடைய தருமமென்று விதித்திருக்கிறதே ஒழிய பிராமணன் பிராமணனுக்கே கொடுக்க வேண்டும், மற்ற ஜாதியாருக்குக் கொடுக்கப்படாது என்று எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்படவில்லை. தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்காதவனைச் சாஸ்திரத்தில் சண்டாளனென்றும் உலகத்தில் மகா பாவி என்றும் சொல்லப்படுகிறது. பின் க்ஷத்திரியர்கள் நம தேசத்திலில்லை. க்ஷதத்திலிருந்து ரக்ஷணத்தைச் செய்கிறவனெவனோ அவன் யாராயிருந்தாலும் அவனே க்ஷத்திரியனெனச் சொல்லப்படுவான் என்கிற அவர்களது சாஸ்திரப்படி வெள்ளைக்காரனைத்தான் இப்போது க்ஷத்திரியன் என்று சொல்லவேண்டும் (க்ஷதத்திலிருந்து என்றால் துன்பத்திலிருந்து) வியாபாரம் செய்கிறவர்கள் வைசியர்களானால் பார்சிகளும் வெள்ளைக்காரர்களுமே பெரிய வியாபாரிகள். சூத்திரர்களென்று ஒத்துக்கொள்ள யாரும் தயாராயில்லை. மடையன், முட்டாள், கூலியாள், ஒருகர்மமுமில்லாத கீழ் மகன் முதலான இழிசொல் தத்துவத்திற்கே சூத்திரன் என்கிற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை "குடியரசு" எல்லாருக்கும் எடுத்துக் காண்பித்திருக்கிறது. இனி வருணாசிரமத் தலைவர்களைப் பற்றி கவனிப்போம். திரு டி. ஆர். ராமசந்திர அய்யர் பெரிய வக்கீல் சாஸ்திரம் படித்தவர். மலையாளத்து பிராமணன். எழுபது வயது ஆகியும் வக்கீல் வேலையை விடமாட்டேன் என்கிறார். இவர் வானப்பிரஸ்தாசிரமம் எப்பொழுது அடைவது? மகனுக்கு வயது வந்தவுடனே வானப்பிரஸ்தாசிரமத்தை யடையவேண்டுமென்று இவர்கள் சாஸ்திரம் விதித்திருக்கிறது, என் சிநேகிதர் ஒருவருடைய கோர்ட்டு அபீல் கேசுக்கு நானூரு ரூபாய் பீஸ் வாங்கிக்கொண்டு விசாரணையன்று வேறு வக்கீலுக்கு ஒரு காகிதம் கொடுத்து விட்டு இவர் வேறு ஊருக்குப் போய்விட்டார். பணம் வாங்கின, வக்கீலுக்கும் காகிதத்திற்காக வந்த வக்கீலுக்கும் உள்ள வித்தியாசத்தையும் கேசிலுள்ளசிரத்தையையும் நீங்களே கவனித்துப் பாருங்கள், இது வர்ணாசிரம தர்மமா? வாங்கின பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிடுவது தர்மமா? அல்லது ஏதோ ஒருவனைக் காண்பித்து பணத்தை எடுத்துக் கொள்ளுவது வருணாசிரமதர்மமா? இப்படியா பிராமணனுக்கு அவனது வருண தர்மம் விதித்திருக்கிறது? திரு. டி. ரெங்காச்சாரியார் ஆப்பிரிக்காவிற்குப் போகையில் மாலை போட்டு ஆசி கூறி அனுப்பினாரே. இது வருணாஸ்சிரம தர்மத்திற்கு நேர் விரோதமல்லவா? இவர் ஊர் மலையாளத்தில் ஈழுவர் தீயர் முதலான ஜாதிகளை வீதியில் நடக்கக்கூடாது என்கிறாரே இது மட்டுமா வருணாஸ்சிரம தர்மம் ஆனால் பிராமணன் இஷ்டமான தேசத்திற்குப் போகலாம், ஆடு மாடு அனைத்தையும் அளவிற்கு மீறி உண்ணலாம். வேண்டியதைக் குடிக்கலாம வருணாஸ்சிரமத்தலைவர்கள் வழியனுப்பி ஆசீர்வாதம் செய்வார்கள். நம் மதம் நம் கொள்கை நம்மைப்போன்ற ரூபம் நடையுடைபாவனை யுடையவர்களை 144 போட்டு வீதியில் வாராமல் தடுக்க ஏற்பாடு செய்வார்கள். இது என்ன வர்ணாஸ்சிரம தர்மமா? இப்படி ஒரு ஊரும் சாஸ்திரமும் உடைய ஊர் விளங்குமா? வருணாஸ்சிரமம் பேசுகிற பார்ப்பானின் அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் இவர்களெல்லாம் என்ன செய்கிறார்கள்? இவர்கள் பிள்ளைகளெல்லாம் என்ன உத்தியோகத்திற்குப்படிக்கிறார்கள்? இவர்கள் பெண்கள் எந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறது இங்கெல்லாம் வருணாஸ்சிரம தர்மம் உபயோகப்படுத்தப்பிரயத்தனப்படுகிறார்களா? மற்ற ஜாதியாரை ஏமாற்றிப் பிழைப்பதற்கு ஆகச்செய்யும் ஏற்பாடுதான் இப்போதைய வருணாஸ்ரம தர்மம் என்பதற்கு என்னதடை? மேற்கத்திய நாகரீகம் என்று சொல்லப்பட்ட நதி பல வாய்க்கால்கள் வழியே உலகமெல்லாம் பாய்ந்துகொண்டுவரும் இந்தக் காலத்தில் ஆளுக்கும் அரசுக்கும் போராட்டம்; தொழிலாளிக்கும் முதலாளிக்கும் சண்டை, ஆணுக்கும் பெண்ணுக்கும் யுத்தம், ஜாதிகளின் கூட்டஹங்காரத்திற்கும், மானுஷிபபரம கர்மங்களுக்கு யுத்தம்; அக்கனமே வர்த்தகம், அரசு எனுமிவற்றின் குரூரமான கொடுமைகளுக்கும் இன்பத்தையும் பரிபூரண சாந்தியையும் சுதந்தரத்தையும் விரும்புகிற மனுஷிய சுபாவங்களுக்கும் யுத்தம்; இத்தனை யுத்தக்குழப்பங்களுக்கும் சமாதானம் கண்டு பிடித்துக்கொண்டிருக்

[இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.]

கோகலே ஹாலில்.

திரு. ஷண்முகம் செட்டியார்

நேற்றையத்தினம் (9-6-27) மாலை 5-30 மணிக்குத்தேசியவாதிகள் சங்கத்தின் ஆதரவில் கோகலே மண்டபத்தில் மாபெருங் கூட்டமொன்று கூடியது. டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். தற்கால ராஜீய நிலைமை என்ற விஷயத்தைப் பற்றித் திருவாளர் ஆர். கே. ஷண்முகம்செட்டியார் எம். எல். ஏ. அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார். மண்டபம் முழுதும் மக்கள் நிறைந்திருந்தனர்.

அன்றயப் பிரசங்கத்தைகேட்கவந்த சகல கக்ஷித் தலைவர்களும் பொது ஜனங்களும் அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஐயங்கார் சிஷ்யர்களில் சில பார்ப்பனர்கள் (பார்ப்பனரல்லாத சிஷ்யர்கள் வந்திருந்தாலும் தம்மையிலுள்ள வாலை ஆட்டவில்லை) மட்டும் அடிக்கடி கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க விரும்பிக்கத்தினார்கள். தலைவர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் எழுந்து இக்கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கத்துணிந்தகாலிகளுக்கும் அதன் தலைவர்கட்கும் ஒரு எச்சரிக்கை செய்தார்.

பார்ப்பனப்போலி அரசியல் வாதிகள் குழப்பம் விளைவிக்க முயர்ச்சிப்பார்கள் என்பது தனக்குத் தெரியுமென்றும் ஆனால் அதற்குத்தகுந்த முஸ்திப்பை நாம் செய்திருப்பதாகவும் மகாஜனங்கள் குழப்பக்காரர்களைப்பற்றி கவலையுற வேண்டுவதில்லை என்றும் ஒரு செய்தியை சொன்னார் அதன்பின்பு அமைதி நிலவினது இரண்டொரு பார்ப்பனரைக் கொண்டு கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க எண்ணிய ஐயங்கார் கூட்டம் ஏமாந்தது ஆச்சரியமல்ல. கலகம் விளைவிக்க வந்த காலிகளின் செய்கை கண்டிக்கத் தக்கதாயினும் தலைவரும் செட்டியாரும் அவர்களைத் தங்கள் ஆதரவுடன பத்திரமாய் வெளியில் வந்து சேர்த்தார்கள் (சென்ற ஆறுமாதத்திற்கு முன் திரு தெண்டபாணிக்கு சேர்ந்தகெதி இங்கில்லை. என்னெனில்ஐயங்கார் தலைவர்கள் எவருமில்லாததே காரணம்)

திரு. ஆர். கே. ஷண்முகம்

தலைவரவர்களே, நண்பர்களே, "தற்கால ராஜீய நிலைமை" என்பதைப்பற்றி பேசுங்கூட்டத்தில் இவ்வளவுபெரிய கூட்டம் இங்கு விஜயம் செய்திருப்பதற்காகவும் இப்பெருங் கூட்டத்தில் எனக்குப்பேசும் பாக்கியம் கிடைத்ததற்காகவும் நான் சந்தோஷமடைகிறேன்.

டாக்டர் வரதராஜுலுவுடன் இப்பொழுது சேர்ந்து கொண்டேனென்று ஸ்ரீமான் சொல்வது பொய்யாகும் (நகைப்பு) காங்கிரசின் பால் பக்தியுடையவர்கள்காங்கிரசைக் குலைத்துவருபவர்களை விரட்டியடிக்க முயற்சி செய்வதில் யாதொரு ஆச்சரியமுமில்லை. (கேளுங்கள் கேளுங்கள்) காங்கிரசின் தலைவரான ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் காங்கிரசின் பெயரால் செய்துவரும் அட்டூழியங்களையும் அசட்டுத்தனங்களையும் அக்கிரமங்களையும் கண்டு நான் மாத்திரமல்ல டாக்டரவர்கள் மாத்திரமல்ல நாடு முழுதும் மனம் புண்ணுபிருக்கிறது டாக்டர் வரதராஜுலுவை வகுப்புவாதி என்றும் வகுப்புத்துவேஷியென்றும் வெகுசுலபமாகச் சொல்லிவிடலாம. அப்படிசொல்வதின் மூலம் ஜனங்கள் ஏமாந்து நம்பி விடுவார்களென்றும் ஸ்ரீமான் எண்ணிக் கொள்ளலாம் (நகைப்பு) ஆனால் மிஸ்டர் பி. ஜி ஹார்னிமனைப்பற்றி வகுப்புத் துவேஷியென்றும் சொல்லி மக்களின் கண்களில் மண்ணைத் தூவுதலென்பது முடியாது (கேளுங்கள் கேளுங்கள்). சுய பக்தியும் சுய நிர்ணயமுமுள்ளவர்கள் நம் நாட்டிலிருக்கிறார்களென்பதை ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தெரிந்து கொள்ளவேண்டும். அந்தத்தலைவர்களெல்லாம் ஸ்ரீமானின் திருவிளையாடல்களைக் குறைகூறாமலிருக்க முடியாது. காங்கிரஸினுடையவும் காங்கிரஸ் தலைவரான சீனிவாசயங்காருடையவும் காரியங்கள் சரியா தப்பா என்று யாராவது ஆராய்ச்சி செய்யப்புகின் அது பெரும்பாவமென்று கருதப்படுகிறது. 50 "ஆண்டுகளாக இந்திய அரசியல் அரசியல் நிலைமை" என்று பேசியிருக்கின்றனர்.

நம் நாட்டுச்சரித்திரத்திலேயே இவ்வளவு கேவலநிலைமை எப்பொழுதும் நிகழ்ந்ததே இல்லை. நாட்டில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வருஷத்தில் காங்கிரஸ் தலைவர் ஸ்தானத்தை வகித்துவருபவரின் திறமையாலும் சாமர்த்தியத்தாலும் காங்கிரசில் குழப்பமும் கலவரமும் கட்சிப் பிளவும், நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தலைவரென்பவருக்கு இதை விடப்பெருமை வேறென்ன வேண்டும். (நகைப்பு வெட்கம் வெட்கம்) இதற்குமுன் எவ்வளவோ காங்கிரசின் தலைவர் ஸ்தானம் வகித்திருந்தனர் அவர்களில் ஆண்மக்களுமிருந்தனர் பெண்மக்களுமிருந்திருக்கின்றனர். ஆனால் அவர்களுள் எவரும் இவ்வண்மையுடைத்தலைவரான சீனிவாசய்யங்காரைப்போல நம்நாட்டில் இவ்வளவு பலமான பயத்தாற்றை எழுப்புவதில் ஜயம்பெறவே இல்லை. (வெட்கம், வெட்கம்) சீனிவாசய்யங்கார் நாட்டுக்கு நன்மையைக்கொண்டு வந்தாரா? பெருந்தீங்கைக்கொண்டு வந்தாரா வென்பதைப் பொது ஜனங்கள் தான் தீர்மானிக்க முடியும்.

வடஇந்தியாவிலுள்ளவர்களுக்குத் தென்னிந்தியாவிலிருந்துவரும்பார்ப்பனரல்லாதாரின் சச்சரவுகளைப்பற்றித் தெரிந்து கொள்ள முடியவில்லை. தென்னிந்தியாவிலுள்ளவர்களுக்கு வடஇந்தியாவில் நிகழ்ந்து வரும் இந்து முஸ்லீம் சச்சரவுகளைப்பற்றியும் அதிகம்தெரிந்துகொள்ளமுடியாமலிருக்கிறது வடஇந்தியாவில் இந்து முஸ்லீம் சச்சரவுகளைப்பற்றியும் அதிகம் தெரிந்து கொள்ளமுடியாமலிருக்கிறது வடஇந்தியாவில் இந்து முஸ்லீம் சச்சரவுகளைப்பற்றி எனக்குக்கொஞ்சம் தெரியும்.

இதனால் இந்த மதவித்தியாசத்தில் பேரால் இருசமூகங்களிலும் சில தலைவர்கள் தங்கள் நலன்களை விருத்தியாக்க முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள் 1919 வருஷம் சீர்திருத்தம் வழங்கப்பட்டபின்புதான் இந்து முஸ்லீம் சச்சரவு அதிகப்படத்தலைப்பட்டு விட்டது அயலரசாங்கத்தின் கீழ் நம்நாடு அடிமைப் பட்டுக்கிடக்கும் வரையில் இத்தகைய சச்சரவுகள் இருந்தேதீரும்.

தனித்தொகுதியா கலப்புத்தொகுதியா ?

வகுப்புத் தொகுதிகளால் தானா இந்து முஸ்லீம் சச்சரவுகள் நிகழ்கின்றன வென்பதை ஆலோசிக்க வேண்டும்.

இந்துமுஸ்லீம் ஒற்றுமைக்கு முயற்சிசெய்யப்பட்டிருக்கிறதே யொழிய இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுத்தியாய்விடவில்லை, கலப்புத்தொகுதியின் மூலம் இந்து முஸ்லீம் ஒற்றுமையை ஸ்தாபிக்கப்படுவதற்குங் கூட அநேக கஷ்டங்களிருக்கின்றன கூட்டுத்தொகுதியைப்பற்றி எனக்கு அளவுக்குமீறிய நம்பிக்கையுமில்லை.

ஜனநாயக தத்துவமான அரசாங்கத்தை இந்நாட்டில் ஸ்தாபிக்க வேண்டுமானால் ஒவ்வொருபிரதிநிதிக்கும் தனித்தனித்தொகுதி இருக்கவேண்டியதுடன் பிரத்தியேக பிரதிநிதித்துவத்தை ஒதுக்கிவைப்பதை நீக்க வேண்டுவதும் அவசியமென நான் கருதுகிறேன் இங்கிலாந்து முதலிய நாடுகளெல்லாம் ஒவ்வொரு பிரதிநிதிக்கும் ஒவ்வொரு தனித்தொகுதி முறைதான் கையாளப்பட்டுவருகிறது.

பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்.

நண்பர்களே, இந்து முஸ்லீம் ஒற்றுமையைத் தான் ஏற்படுத்தி விட்டதாக சீனிவாசய்யங்கார் தற்புகழ்ச்சி செய்து கொள்கிறார். இந்து முஸ்லீம் சச்சரவுகளுக்காக கவலை கொண்டு அதை ஒழித்து ஒற்றுமையை ஏற்படுத்தியதாகப் புகழ்ந்து கொள்ளும் சீனிவாசய்யங்காருக்கு, இத்தென்னிந்தியாவில் தன் சொந்த மாகாணத்திலேயே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் பார்ப்பன பார்ப்பனரல்லாதாரின் சச்சரவுகளை யொழிக்க நேரமும், அவகாசமும் அக்கரையும் தேசாபிமானமுமில்லையா என்றுதான் கேட்கிறேன் [வெட்கம் வெட்கம்] வட இந்தியாவில் வகுப்புத் துவேஷத்தை ஒழிக்க அவதரித்த அவதார புருஷர் தென்னிந்தியாவிலேன் வகுப்புணர்ச்சியை வளர்த்துவரவேண்டும் [கைதட்டல்,] [வெட்கம்வெட்கம்.]

சென்னைசுயராஜ்யக் கட்சியின் போக்கியதை

நம் நாட்டின் அரசியல் நிலைமையின் மற்றொரு அம்சமாயிருப்பது, காங்கிரசின் கட்டளையைச் சென்னைக் காங்கிரஸ் கட்சி எவ்வளவுதூரம் நிறைவேற்றியிருக்கிறதென்பதாகும் சென்னைக் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளைப் பற்றி நான் பேசுவதற்கு அநேககாரணங்களிருக்கின்றன. இவ்விஷயத்தில் சென்னை மாகாண அரசியல் வாதிகள் சம்பந்தப் பட்டிருப்பது மட்டுமின்றி அதில் இந்திய அரசியல் வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளார்கள். ஆவ்விஷய சம்பந்தப்பட்டவரையில் இதைமூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் 1 மந்திரிகளின் சம்பளம் மறுக்கப்படவேண்டுமென்று சென்னை சட்டசபையில் ஒரு தீர்மானம் வந்தபோது காங்கிரஸ் கட்சியினர் நடுநிலைமை வகித்தது 2 இதற்குக்காரணமாயிருந்த அரசியல் வாதிகளின் சமாதானம் 4 சென்னைக்காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொண்டது சரிதான் என்று அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி தீர்மானித்தது.

ஒட்டர்களுக்குத் துரோகம் செய்தனர்.

ஒட்டர்களுக்குச் செய்து கொடுத்த வாக்குத் தத்தங்களையும் கௌஹாத்தி காங்கிரஸ் செய்த முக்கியமான தீர்மானங்களையும் சென்னைக் காங்கிரஸ் வாதிகள் மீறி விட்டனர். இவ்வாறு நாட்டு மகா ஜனங்களுடையவும் இந்நாட்டின் மகாசபையென்று சொல்லப்படுகிற காங்கிரசினுடையவும் கண்களில் மண்ணைத்தூவி, தாங்கள் தான் மகா பிரகஸ்பதிகளென்று சென்னைக்காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொண்டனரே? அதற்குக்காரணமென்ன? அவர்களுக்கு நேர்ந்த பேராபத்தென்ன? தங்கள் கொள்கைகளையும் காற்றில் பறக்க விட்டுவிட நேர்ந்துவிட்ட காரணங்கள் தானென்ன? நகைப்பு இரட்டை ஆட்சியைவெற்றி பெற நடத்தப் போக முடியாதென்று அரசாங்கத்தாருக்கு விளக்கிக் காட்ட வேண்டியது காங்கிரஸ் கட்சியின் கடமையும் கொள்கையுமாயிருக்கிறது. இதைச்செய்து முடிப்பதில் யாதொரு கஷ்டமுமில்லை இது புதிதுமில்லை இது ஒரு பிரமாதமுமில்லை. தேர்தல் முடிவடைந்தவுடனே கவர்னர் தேர்தலில் வெற்றியடைந்த கட்சியைக் கூப்பிட்டு மந்திரி சபையை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். அச்சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவராயிருந்தவர் மிஸ்டர் சி. வி. எஸ். நரசிம்மராஜு ஆவார்கள் உண்மையான தேசபக்தியும் யோக்கியமும் வாய்ந்தவரான மிஸ்டர் நரசிம்மராஜு அவர்கள் காங்கிரஸ் கட்டளையின்படி மந்திரிசபை அமைக்க மறுத்துவிட்டார்

கூட்டத்திலொருவர்: அப்பொழுது கௌஹாத்தி காங்கிரஸ் கூடவே இல்லையே.

திரு. ஷண்முகம். —மந்திரி உத்தியோகங்கள் பெறக்கூடாதென்று கௌஹாத்தி காங்கிரசுக்கு முன்னாலேயே தீர்மானிக்கப் பட்டிருப்பதும் மற்றும் சபர்மதி ஒப்பந்தம் உடைந்ததற்கும் இது தான் காரணம் (பெருத்த கைதட்டல்).

மறுபடியும் தொடர்ச்சியாக மிஸ்டர் ஷண்முகம் பேசியதாவது மிஸ்டர் நரசிம்மராஜு

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

சென்னை மாகாண பார்ப்பனரல்லாதாரின் விசேஷ மகாநாடு.

1927-ம் வருஷம் ஜூலை மாதம் 2, 3 தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவரும் சட்டசபை அங்கத்தினருமான,

திவான் பகதூர்

S. குமாரசாமி ரெட்டியார், B. A. B. L.,

அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும்.

நமது மாகாணத்தில் உள்ள பார்ப்பனரல்லாத மக்களின் பொதுமுன்னேற்றத்தை உத்தேசித்தும் சிறப்பாக நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும் இது சமயம் நமக்குள் ஒற்றுமையையும் கட்டுப்பாட்டையும் உண்டாக்க வேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. அதற்கு ஆகவே பெரிதும் இம்மகாநாடு கூட்டப்படுகிறது. ஆதலால் பார்ப்பனரல்லாத கனவான்கள் தங்களுக்குள் அரசியல்விஷயத்தில் எவ்வித அபிப்பிராய பேதமிருந்தாலும் அதற்குக் குந்தகமில்லாமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து உழைப்பதற்கு அனுகூலமான ஒரு திட்டத்தை தயாரிக்கவும் அவரவர்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்கவும் தயவு செய்து எல்லா பார்ப்பனரல்லாத கனவான்களும் விஜயம் செய்து மகாநாட்டை வெற்றி பெற நடப்பிவித்துக் கொடுக்க வேணுமாக வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

P, இரத்தினசபாபதிக் கவுண்டர்,
வரவேற்புக் கமிட்டி தலைவர்.

பார்ப்பனரல்லாத சென்னை மாகாண விசேஷ மகா நாடு

அறிக்கை 1

திருவாளர் பி. இரத்தினசபாபதிக்கவுண்டர் அவர்கள் உபசரணைக்கமிட்டித்தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறா.

அறிக்கை. 2

திருவாளர் திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் B. A. B. L. M. L. C. திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரசிடெண்டு அக்கிராசனம் வகிப்பார்.

அறிக்கை 3

மகாநாடு ஜூலை மாதம் 2, 3 தேதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

அறிக்கை 4

உபசாரணைக்கமிட்டி சந்தா	ரூ. 5—0—0
டெலிகேட் சந்தா	ரூ. 2 0—0
விசிடர் சந்தா	ரூ. 1—0—0

ஸ்திரீகளுக்கு யாதொரு கட்டணமும் இல்லை டெலிகேட்டுகளுக்குத் தங்குமிடம் சாப்பாடு முதலியவை இலவசமாக அளிக்கப்படும்.

அறிக்கை 5

திருவாளர்கள் ராவ் பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் பி. எஸ். சாத்தப்ப செட்டியார் பி. எஸ். ஜி. கங்கா நாயுடு சி. எ. நஞ்சப்ப கவுண்டர், பி. நஞ்சுண்ட கவுண்டர், வி. அருணாசலம் செட்டியார் காரியதரிசிகள்.

அறிக்கை 6

மகா நாட்டைப்பற்றிய கடிதப் போக்குவரத்து முதலியவைகளை திருவாளர் வி. அருணாசலம் செட்டியார் அவர்களுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருவள்ளுவர் திருநாள்:— 13—4—27உ திங்கட்கிழமை யன்று மயிலையிலும் தென் மாடவீதி வன்னியசத்திரத்திலும் திருவள்ளுவர் கோவிலில் வள்ளுவர் திருநாளை மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். பலபெரியவர்கள் அரிய சொற்பொழிவுகளைநிகழ்த்துவார்கள். அதே தேதியில் சகலரும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்று திருவள்ளுவர் கழகத்துக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

இந்த ஏன் மௌனம்?
பார்ப்பனப்பத்திரிகைகளின் புரட்டு.

3-4-27ல் துவார் என்ற கிராமத்தில் அ. இ. பார்ப்பனமகாநாடு நடைபெற்றதாகவும் அகில் இந்தியாவின் பிராமணப் பிரதிநிதிகள் (100) நூறு கனவான்கள் வந்திருந்ததாகவும் பிராமண சமூக முற்போக்கிற்கான அநேக தீர்மானங்கள் தீர்மானித்ததாகவும் காணப்படுகிறது. வயிற்றுச்சோற்றுப்பார்பனக் கூட்டத்தைக் கண்டு இதற்கு உடனே பரிகாரம் செய்யவேண்டும் இல்லாவிடில் அரசியல் பார்பபனர்களின் இடஞ்சல்களைவிட இவர்கள் அதிகம் தீங்கு செய்வார்கள் என்ற குறுகியநோக்கத்தோடு இதை எழுதவில்லை. அகிலஇந்தியபார்ப்பார கூட்டத்திற்குத் தலைவரும், வரவேற்புத தலைவரும் தமிழ் நாட்டு பார்ப்பனர்களாயிருப்ப தொன்றே இதன் யோக்கியதையைநன்குகவிளக்குகிறது. அதில் மகாத்மா காந்தியை திட்டுவதைப் பற்றியோ, தீண்டாமை ஆலயப் பிரவேசம், ஜாதிச் செருக்கு, புரோகிதமகிமை இத்தகைய தீர்மானங்கள் செய்யப்பட்டதைப்பற்றியோ கவலை இல்லை. ஆனால் "பார்ப்பனரல்லாதார்" என்ற பெயர் கேட்டதும் மோசம் வந்தது ஜாதித்துவேஷம் வகுப்புத்துவேஷம், என்று ஊளை இடும் தலைவர்களும, பத்திராதிபர்களும், இதற்கென்னபதில் சொல்லுகிறார்கள். இதை ஆதரித்து பார்ப்பனமித்திரன்குறிப்பு எழுதியதும், புதுக்கோட்டையிலுள்ள இரு பார்ப்பன பத்திரிகைகள் தலையங்கம் எழுதியதும், கருத்து என்ன? என்பதே நமது ஐயப்பாடாகும்.

தமிழ்நாட்டுப்பார்ப்பனரல்லாதார் ஊமைகளாய் சுயமரியாதை அற்று வாழும் வரையில் இதைப்போன்ற செய்திகளும நிகழ்ச்சிகளும் நிமிடங்கள்தோறும் நடந்து கொண்டிருப்பது ஆச்சரியமல்ல. ஆனால் நாம் சொன்னாலோ கனம் சி. பி. ஐயரும் அவரின் 153மவந்து விடும்போலும். துவார்நேசன்.

மேலூர்தாலூகாதின்னப்பட்டி:—30-5-27 காந்திமைதானத்தில் ஸ்ரீமான் துங்கன் செக்காண்டித்தேவர் அக்கிராசனத்தின்கீழ் ஓர் பெரிய பொதுக் கூட்டம் பெரும் ஜனத்தொகையுள்ளதாகக் கூடி பிராமணனும் தெவசமும் என்பது பற்றியும், குடியேறிய ஆரியனும் அவன் கொண்டாட்டமும் என்பது பற்றியும், ஆரியனும் இந்துவும் என்பது பற்றியும், 'திராவிடன்' 'குடி அரசு' 'தமிழ் நாடு' என்பது பற்றியும், 'லக்கீலும் கோர்டும் என்பது பற்றியும், 'ஜஸ்டிஸ்' மகிமையும் சுயராஜ்யக்கட்சி ஊழலும், என்பது பற்றியும், தேசவிஷயமும் செந்தமிழும், கதரும் கைராட்டினம் என்பது பற்றியும், நல்வினை தீவினை தடங்கல்களும் பார்ப்பனர்களுக்கும் சம்பந்த முண்டா என்பது பற்றியும, பார்ப்பனர்களுக்கு ஓட்டு கொடுக்கக்கூடாது என்பது பற்றியும், வகுப்புவாரி பிரதிநிதித்வத்தைப்பற்றியும் சுமார் 20 கனவான்களுக்குமேல் பேசினார்களென்றும் ஜனங்களுக்குள் பெரிய உர்ச்சாகம் யேற்பட்டதென்றும் ஒருவர் அறிவிக்கிறார்.

சிங்கப்பூரில் சுயமரியாதை உதயம்

திருமணப் பத்திரிகை

ஜெகந்நாதனின் திருவருளை முன்னிட்டு நிகழும் பிரபவ-௵ வைகாசி-மீ 14 உ க்குச்சரியான ஆங்கிலம் 1927 வருஷம் மே மீ 27 தேதி வெள்ளிக்கிழமை அமர பக்ஷமும் ஏகாதசி திதியும் நக்ஷத்திரமும் அமிர்த யோகமுங் கூடிய சுபயோக சுப தினத்தில் உதயாதி மணி 7-க்கு மேல் 9-க்குள்ளாக மிதுன லக்கினத்தில்.

V. N. ஜகவலு அவர்களின் சுவிகாரப் புத்திரன் சிரஞ்சீவி கோவிந்தசாமிக்கும்

கு. வீரப்ப செட்டியார் அவர்களின் சுவிகாரப் புத்திரி சௌபாக்கியவதி திருநாகவல்லிக்கும் திருமணம் இனிது நடந்தேறியது

(கடிதம்)

"குடி அரசு" ஆசிரியர்,

தேவரீர் அய்யா அவர்களுக்கு நமஸ்காரம்.

தங்கள் கடிதம் இல்லை ஆதலால் தங்கள் கடிதத்தை எதிர்பார்த்தவர்களாகயிருக்கின்றோம். தவிர மாயவரம் மகாநாடு இறைவனருளால் இனிதே நடை பெற்றது குறித்து பெரிதும் திருப்தியடைந்தோம்.

மேல் கண்ட கல்யாணமொன்றை பார்ப்பனரை நீக்கி நமது சகோதரர்களால் செய்துவைக்கப்பட்டதை வணக்கமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஷெ ஸ்ரீமான் கு வீரப்ப செட்டியார் குடிஅரசு அபிமானிகளில் ஒருவர். ஷெயார் பல இடையூறுகளுக்கும் பலரின் மனஸ்தாபங்களுக்கும் இடையில் எங்களின் வேண்டுகோள்படி ஷெ கல்யாணத்தை சிறப்பாய் நடத்திவைத்தார். ஷெ கல்யாணத்திற்கு இவ்விடமிருந்து நாங்களும், திருவாளர்கள் தாமோதரம் பிள்ளை, பெருமாள் செட்டியார் முதலியவர்களுடன் 26-5-17ல் இரவு 9 மணி வண்டியில் ஜோகூர்போய் மறு நாள் காலை 7 மணிக்கு மேல் முகூர்த்தம் ஆரம்பித்து 9-மணிக்குள்ளாக ஷெ கல்யாணத்தை திருவாளர் தாமோதரம் பிள்ளை அவர்கள் முறைப்படி நடத்திவைத்தார்கள். ஷெ கல்யாணம்தான் முதல் முதல் ஷெ ஜோகூரில் பார்ப்பனரை நீக்கி நடத்தியிருப்பதற்காகவும் எங்களின் வேண்டுகோள்படி சுயமரியாதையை கடைபிடித்து பல இன்னல்களையும், தன்னுடைய சிரமத்தையும், ஊராரின் அதிருப்தியையும் பொருள்படுத்தாது சுயமரியாதையை நிலைநாட்டியதற்காகவும் திருவாளர் கு. வீரப்ப செட்டியாரின் பேருற்றல் போற்றற்கரியது. அதனபால் எங்களின் நன்றியறிதலையும், மனச்சந்தோஷத்தையும் தெரிவிப்பதின் பொருட்டு ஒரு வெள்ளிக்கிண்ணம் கல்யாணம் முடிந்த பின்னர் தம்பதிகளுக்கு ஆசீர்வதித்துப் பரிசளிக்கப்பட்டது. [illegible] இவ்வூரில் ஜூன்-மீ முதல் வாரத்தில் ஒரு பிரபல பிராமணரல்லாதாருடைய கனவானின் குமாரருக்குப் பார்ப்பனீய மொழிந்த கல்யாணம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதன் விபரம் பின்னால் தெரிவிக்கிறோம். கல்யாணம் முதலிய சடங்குகள் செய்துவைப்பதற்கு தகுதிப்பட்ட மனிதர் இவ்விடம் ஒருவருமில்லை அதற்காக அவ்விடமிருந்து ஒருவரை தயார்செய்து அனுப்பினால் சௌகரியமாயிருக்குமென்று நினைக்கிறோம். ஆதலால் இவ்விடத்தில் இன்னும் சிலரை அனுசரித்துக்கொண்டு வரவழைக்கலாமென்று அபிப்பிராயப்படுவதால் அதன் விபரமும் பின்பு தெரிவிக்கிறோம். தாங்களும் தயவுசெய்து அதற்குத்தகுந்த ஆசாமியை அனுப்பிவைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். இன்னும் எங்களால் இயன்றவரையில் பிரயாசைப்பட்டு தங்களின் கொள்கைகளைப் பரப்பிவைக்கிறோம்.

ஜோகூர் கல்யாணத்தின் விபரத்தை தங்கள் பத்திரிக்கையில் விரிவாய் பிரசுரிப்பதுடன் எங்களின் நன்றியறிதலையும் பத்திரிக்கை மூலமாய் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். மற்றவை தங்களுடைய கடிதம் பார்த்து நடந்துகொள்ளுகிறோம்.

ஆகையால் வேணும் நமஸ்காரம்.

கோ. சாரங்கபாணி.

குறிப்பு:— வெளிநாடு சென்றுள்ள நமது சகோதரர்கள் இதுவரையில் நமது "குடி அரசின்" கொள்கைகளை மிகுதியும் ஆதரித்து வருவதற்கு நாம் சந்தோஷப்படுவதைவிட அங்கு தங்கள் சுயமரியாதையை நிலைநிறுத்துவதிலும், குருட்டு வழக்கமான புரோகிதக் கொடுமையை ஒழிப்பதில் மிகுதியும் தீவிரமாகப் பாடுபட்டுவருவதைக் கண்டு அவர்களைப் பாராட்டுகிறோம். யேனைய பார்ப்பனரல்லாத கனவான்களும் இம் முறையை கையாளவேண்டுகிறோம். முதன் முதல் பார்ப்பனீய மற்ற மணத்தை இன்று நடத்திக்காட்டிய திருவாளர் மணமகனையும், மணமகளையும் பாராட்டி இனிது வாழ்த்துகிறோம். மணமகளும் மணமகனும் திருவருளால் நீடூழிவாழ பிரார்த்திக்கிறோம். (ப-ர்)

தமிழ்த்திருமணங்கள்.

திருவாரூர்

பிராமணீயத்தை ஒழித்து முதல முதலாக இந்த ஊரில் விவாகம் நடத்துவதற்கு உடன் பட்டவர் இவ்வூர் பிரபலஸ்தரான ஸ்ரீமான் ஸ்ரீருத்ராபதிபிள்ளையே ஆவார் அவர்களின் திரு. குமாரத்தி சௌபாக்கியவதி மதுராம்பாளை, பாண்டிக்குடி வில்லேஜ் முனிசிப்பும் மிராசுதாருமான ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் திருக் குமாரன் சிரஞ்சீவி வைத்தியலிங்கம் பிள்ளைக்கு 9-6-27 ல் சில குருநாததேசிகரைக்கொண்டு விவாகச் சடங்குகளை நடத்தி வைத்து விவாகம் சிறப்பாய் நடந்தேறியது. பின்பு பிராமணரல்லாதார் இயக்க நிதிக்கு பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் முறையே ரூ. 1 வீதம் சம்பாவனை செய்தார்கள் இதோடு கொடுத்த 10 பாக்கையும் இரண்டு வெற்றிலையையும் ஏலம்போட்டதில் உயர்ந்த கேள்வியாகக் கேட்ட ஸ்ரீமான் சாமிநாத நாடாருக்கு ரூ 3 க்கு விடப்பட்டது. அது சமயம் ஸ்ரீமான் வக்கீல் சிவசுப்ரமணிய முதலியார் பி.ஏ அவர்கள் இவ்விதச்சமயாச்சாரிகளைக்கொண்டு எல்லாரும் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார் என கண்டது உரைப்போர் எழுதுகிறார்.

1927ம் வருஷம் ஜுன் மாதம் 3ம் தேதி வெள்ளிக்கிழமை கோயமுத்தூரைச்சார்ந்த பாப்பநாய்க்கன்பாளையத்திலிருக்கும் ரேஞ்சர் நாராயணசாமி நாயுடு குமாரர் கேசவலு நாயுடு அவர்களுக்கு வட்டமலைபாளையம், வெங்கிடசாமி நாயுடு இல்லத்தில் நடந்தேறிய விவாகத்தில் பார்ப்பனப் புரோகிதரை விலக்கி குலமுறை பெரியோர்களைக்கொண்டு கலியாணச் சடங்குகளை அதிக விமரிசையாகவும், சிறப்பாகவும் நடத்தப்பட்டது.

திருப்புறம்பயம்.— இவ்வூர் திராவிட வாலிபச் சங்கத்தாரின் பெரு முயற்சியினால் இவ்வூர் மேல வீதி ஸ்ரீமான் கண்ணுசாமி நாயுடுவின் குமாரன் சிரஞ்சீவி ராமசாமி நாயுடுக்கு 9-6-27 பார்ப்பனரல்லாத புரோகிதரைக்கொண்டு சிறப்பாய் திருமணம் நடந்தேறியது.

ஆம்பூர்:— பிரபல வியாபாரி திரு சா. மு. கோவிந்த செட்டியாரின் குமாரர் சிரஞ்சீவி சீனிவாசனுக்கும் மைசூர் திருவாளர் சஞ்சீவி நாயுடு அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி தாயாரம்மாளுக்கும் சென்னையிலிருந்து இதற்கென வரவழைத்திருந்த திருவி சின்னுசாமி நாயுடு அவர்களை புரோகிதராகக் கொண்டு விவாகம் செவ்வனே நடந்தேறியது.

குறிப்பு:— பார்ப்பனீய மொழித்த திருமணங்கள் இன்று சகல இடங்களிலும் நடந்து வருவதைபற்றி பெரிதும் பாராட்டுகிறோம். அதன் முழு விபரங்களையும் பிரசுரிக்க முடியாமைக்கு மன்னிக்கவும். முழுதும் பிரசுரிக்க முடியாதவாறு அவ்வளவு அதிகமான சுயமரியாதை திருமணங்கள் நாட்டில் நடைபெறுகிறது என்பது ஜனசமூகம் கண்விழித்துவிட்டது என்பதைக் காட்டுகின்றன. பார்ப்பனீய மற்ற திருமணங்களில் கவனம் செலுத்தும் நாட்டார்கள் பேளையப் பார்ப்பன சடங்குகளையும், குருட்டுத்தனமான பழக்க வழக்கங்களை ஒழிப்பதிலும் தவறாது இருக்க பிரார்த்திக்கிறோம். தமிழ்நாட்டார் இன்று அடைய வேண்டியவை சுயமரியாதை யொன்றேயாகும்.

பெண்ணாடம்:— 28—5—27ல் கடைவீதியில் மாலை 6-மணிக்குக் கூடிய ஓர் பொதுக்கூட்டத்தில் தென்னாப்பிரிக்காவிலிருந்து சமீபத்தில் வந்திருக்கும் திருவாளர் வி. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள் தென்னாப்பிரிக்காவில் நமவர் நிலையைப்பற்றியும் மிகவும் அரிய சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினர்

கரட்டிப்பாளையத்தில் திருமணம்

9—6—27 வியாழக்கிழமை ஒரு சிற்றூரின் திருமணக்காட்சி மிகக் குறிப்பிடக்கூடியதாகவும் யாவரும கருத்தில் இருத்தக்கூடியதாகவும் இருந்தது.

ஒவ்வொரு முக்கிய தெருக்களிலும் மங்களகரக் காட்சியை எடுத்துக்காட்டும் மாவிலைத் தோரணங்களான மரகததோரணங்களும் கொடிகளும் இன்பமான காட்சியை அளித்தது. கூட்டம் கூட்டமாய விருந்தினர்கள் காலையிலிருந்து வந்துகொண்டே இருந்தார்கள். காலை 7-மணிக்கெல்லாம் கலியாண மாளிகையும் அடுத்தடுத்த இல்லங்களும மண்டபமும் விருந்தினர் கூட்டம நிறைபபட்டதாகவே காணப்பட்டது.

கூடியிருந்த சகோதரிகளும் சகோதரர்களிலும சகோதரிகளில் 100க்கு 20 பெயரும் சகோதரர்களில் நூற்றுக்கு 70 பெயரும் சுத்தக் கதருடையில் கூடி இருந்தார்கள். அத்துடனு? அம்மண்டபத்து முழுதும் கதர் ஆடைகளாலேயே அலங்கரிக்கப்பட்டிருந்தது இந்தச் சம்பவங்கள் அவ்விருவரின் கதருடைக்கு அதிக கௌரவம் கொடுக்கவில்லை. மண்டபங்களிலோ திரு. நாயக்கருக்கும் திரு. முதலியாருக்கும் திரு பிள்ளைக்கும் நல்வரவேற்பளிக்கும் வரவுகள் மிக அதிகமாக இருந்தது. இந்நிலையில திரு. ராமசாமி நாயக்கர் அவர்களும, தமிழ்நாட்டின் தவப்பயன் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் தமிழ்கார்மேகம் திருக்கோவலூர் ம. ரா குமாரசாமி பிள்ளை முதலிய உத்தமப்பெரியார்கள் விஜயம்செய்திருந்ததே அத்திருமணத்தின் நிலையையும் அவ்வைபவ உயர்நிலையையும் மிக அதிகப்படுத்திக்காட்டின.

சிதம்பரம் சைவசமயக் குருக்கள் ஸ்ரீலஸ்ரீ முத்துக்கருப்பக் தேசிகர் அவர்களே சகல சடங்குகளையும் ஆற்றினர்.

மங்கிலிய முடிப்பை முடித்ததும் திரு. முதலியார் நாயக்கர் சார்பாக திரு. ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் மணமகனும மணமகளும் நீடூழிவாழ வேண்டுமென்று ஆசீர்வதித்து மங்கள மொழி மொழிந்தார். இத்தகைய மணங்கள் எங்கும் நிலவ வேண்டுமென்றும், மணமக்கள் நீடூழிவாழவேணுமென்றும் உவமான உவமேயங்களுடன் எடுத்துரைத்து ஆசீர்வதித்துமணமகன்திரு ராமசாமிக்கவுண்டருக்கு ரோஜாமாலை யிட்டார், சபையோர் சகலரும் மங்களமொழி வழங்கினர்கள்.

[illegible] வீர மணமகன் இவையாவும முடிந்ததும், சபையோர் ஆச்சர்ய முறுமாறு மணப்பந்தலில் மணக் கோலத்துடன் மணமகளுக்கருகில் அமர்ந்திருந்த மணமகன் திரு ராமசாமிக் கவுண்டர் எழுந்து கூறிய மொழிகள்!

பந்துக்களே!! அடியேனது விவாகத்திற்கு எனது தந்தையின் வேண்டுகோட்கிணங்கி விஜயம செய்துள்ள பெரியார்களே!! எங்களின் மனப்பூர்வமான நன்றியறிதலுள்ள நமஸ்காரம் உங்கட்கு உரித்தனவாக. தமிழ்நாட்டின் தவப்பயன். திரு கலியாணசுந்தர முதலியார் அவர்களும் தமிழ்நாட்டின் தனிப்பெருந்தலைவர் திரு. ராமசாமி நாயக்கரவர்களும் இவ்வேழையின் பொருட்டு விஜயம் செய்ததற்கும், இப்பெரியோர்களின் சார்பாகதமிழ் பொக்கிஷம் திரு குமாரசாமிப் பிள்ளையவர்கள்எங்கட்குத் தங்கள மொழிகளை அடுக்கடுக்கி கடல்மடை திறந்துவிட்டது போன்ற அன்புச்சொற்களை மொழிந்ததற்கும், யாங்கள் செய்யும் கைமாறு யாதுளது?

திரு. முதலியாருக்கும் நாயக்கருக்கும் நாட்டில் உள்ள மகத்தான தேசியமெனும் சமூகத்தொண்டின் மேலுள்ள கவலைக்கிடையில நமது சிற்றூருக்கும் அதிலும் இச்சிறு குடிசைக்கும் விஜயம செய்தது இக்கிராமவாசிகளின் புண்ய வசமென்றே கருதி எங்கள் சமூகத்தின் பெயரால் அவர்கட்கும் மற்று முள்ள பெரியோர்கட்கும நன்றி கூறி நல்வரவேற்கின்றேன். பண்டைய வழக்கமான பிராமணியமற்ற விவாகத்தின் பொருட்டும் எங்களின் பொருட்டும் எங்களின் கதர் மணத்தின் பொருட்டும் அவ்விரு உத்தமர்களும் வந்துள்ளார்கள் என்றெண்ணி இறுமாந்து நானிருந்துவிட்டால் என்னினும் அறியாதவர் எவருமிருக்கார், ஆதலால் அவ்விருவரின் விஜயத்திற்குமதிரு. பிள்ளையின் மங்கள மொழிக்கும. யான் (அல்லது) மணமகனும் மணமகளுமான யாங்களிருவரும் செய்யக்கூடிய கைமாறு யாதுளது.

எனது முதல் கடமை.

ஆயினும் ஒருவாறு துணிந்து ஒரு உறுதிமொழியை இங்கு அளிக்கிறேன், இது புதிதல்ல இப்பழக்கம்தான் திருமணச் சடங்குகள் என்பதின் அடிப்படையான தத்துவமுமாகும், அவ்வுறுதிமொழி, சமயம் கோரி அளிப்பதல்ல எந்த நம்பிக்கையைக் கொண்டு அப்பெரியார் இங்கு விஜயம் செய்துகொண்டார்களோ அந்த நம்பிக்கையைத் தான் நான் உறுதிமொழியாகக் கூறுகிறேன்.

திரு. முதலியார் அவர்கட்கோ பெண்கட்குக் காப்பு வேண்டும் என்பதே. காப்பு என்பது அவர்கள் இஷ்டப்படி சுதந்திரமளித்தலே. பெண்கள் தெய்வவடிவுகள். அவர்களை நமது இல்வாழ்க்கைக்கு ஒரு சமபங்குடையவர்கள் என்றுணர்ந்தும் அவர்களை ஒரு காமக்கிழத்தியாக எண்ணி நடத்துகிறோமேயன்றி அவர்களுக்கு இயற்கையாக நாம் காட்டவேண்டிய மரியாதைகாட்டுவதில்லை. கல்வியினும மரியாதையினும் பெண்கட்குச் சுதந்தரமளிக்க ஆண்மக்கள் முன் வரவேண்டும். நாம் எதிர் காலத்தில் ஆண்மையும் சிறப்பும் உள்ள மக்களாக வேண்டுமானால் பெண்கள் நமது வாழ்க்கையின் ஓர் துணைவி என்றெண்ணவேண்டுமேயன்றி, கேவலம் காமக்கிழத்தி என்று மட்டும் எண்ணக்கூடாது என்றுதான் எண்ணுகிறேன.

எனது மனைவிக்கு என் வாழ்க்கையில் என்ன கடமைகள் செய்யவேண்டுமோ அதைச் செய்ய ஒரு சிறுதும் தவறமாட்டேன். அதைப்போன்றே—திரு நாயக்கர் அவர்கட்கோ என்றால் ஜனசமூகம் அதில் இளைஞர் உலகம் சுயமரியாதையுடையதாக இருக்கவேண்டும், அதற்கிசைய காலம்தள்ள அவர்கள் எண்ணி அதன்படி ஒழுகவேண்டும என்பதாகும். பார்ப்பனர் சடங்குகள்பயனற்றவை என்பதுடன், அது அறியாமையும் ஆகும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றமென்பது சுயமரியாதையுள்ள ஜனசமூகத்தை வளர்ப்பது தான் என்றே எண்ணுகிறேன் இதிலும் யான் ஒரு சிறிதும் இதுவரைத் தவறியதுமில்லை, இனிதவறப்போவதுமில்லை ஆதலால் சபையோர்களே சுயமரியாதையுடன் வாழ என் குடும்பத்தில் பாதி பகுதி பங்குள்ள என் மனைவிக்கு யான் அளிக்கவேண்டிய சுதந்திரங்களை அளிக்க ஒரு சிறிதும் தவறேன்! தவறேன்!! என்று உங்கட்கு உறுதி மொழி அளிக்கிறேன், என் திருமணம் மட்டிலுமல்ல, என் குடும்பத்திலும என் சமூகத்திலும எங்கள் தாலூகாவை பொறுத்தளவில் இத்தகைய தொண்டை இனி யானும எனது மனைவியும் செய்ய (நீடூழி வாழ்க, சபையோர் நீடூழி வாழ்க) சிறிதும் தவறமாட்டேன் என்றும் உறுதி மொழி அளிக்கிறேன் இவை உண்மை.

விஜயம்செய்துள்ள தலைவர்களை மீண்டும் நல்வரவேற்கிறேன் என்றுமொழிந்து அமர்ந்தார்.

பின் ஏனைய சடங்குகள் முடிந்தும் 10 மணிக்கு மணமகனும மணமகளும் மணவறையிலிருந்து எழுந்ததும் பண்தேவாரம். ஓதப்பட்டன, பகல போஜனத்தின் பொருட்டுகலைவுற்றது. பகல் சிறப்புள்ள விசேஷ (சமபந்தி போஜனம்) நடந்தது. முருகன் வாசகசாலையில் 4ம் ஆண்டுவிழா மாலையில் நடைபெற்றது தலைவர்கள் உபன்னியாசித்தார்கள்.

திருச்செங்கோடு, கோயில் குருக்களின் கொடிய செய்கை.

14 தேதி யன்று அர்த்தநாரீஸ்வரர் கோயில் சுவாமி தரிசனத்திற்கு சென்றிருந்த லிங்காயுதர்களை கோயில் குருக்கள்களான பாதி பார்ப்பனர்கள் தாக்கினர்கள் என்று தெரிய பெரிதும் விசனிக்கிறோம். ஆலயங்களின் அநீதிகளையும் குருக்கள்களையும் ஒழிக்க வேண்டுமென்ற புத்துணர்ச்சி உண்டாகி இருக்கும் இந் நாளில் பார்ப்பனர்கள் இதுவரையில் நம்மை அவமானப்படுத்தி வந்ததுடன் நில்லாது அடிக்கவும் ஆரம்பித்தார்கள் என்பது மிக அயோக்கியத்தனமானதாகும். அமைதியை நிலைநிறுத்திய லிங்காயதர்களை பாராட்டுகிறோம். ஆலய வாசிகள் பொறுப்புடையவர்களாதலால் தங்கள் கூலிக்காரர்களான குருக்கள்களின் செய்கைக்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களென நம்புவதால் இதைப்பற்றி அடுத்த வாரம் விவரிப்போம்.

நமது அச்சுக்கூடத்தில்
பலதிறப்பட்ட ஜாப வேலைகள் அழகாகக்
குறித்த காலத்தில் செய்துதரப்படும்
மானேஜர்:—
உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு ஆனி 5௳

கோவையில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

கோவையில் சென்னை மாகாண பார்ப்பனரல்லாதார் விசேஷ மகாநாடு ஜூலை மாதம் 2,3,தேதியில் அதாவது ஆனிமாதம் 18,19 தேதி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதாய் முடிவாகத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. கோவை ஜில்லா மகாநாடாக கூட்டுவதாயிருந்த இந்த மகாநாடு காங்கிரசில் உள்ள சில பார்ப்பனரல்லாதாரின் உணர்ச்சியை அனுசரித்து மாகாண விசேஷ மகாநாடாகக் கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதோடுகூட காங்கிரஸ் பார்ப்பனர்கள் தேசத்தின் பேரால் காங்கிரஸ் என்கிற ஸ்தாபனத்தைக் கைக்கொண்டு அதன்மூலம் பார்ப்பனரல்லாதாருக்குச்செய்துவரும் கெடுதியையும் தேசத்தின் விடுதலையைக் காட்டிக்கொடுத்து தேசத்துரோகம்செய்து பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளச்செய்துவரும் சூழ்ச்சியையும் அறிந்து ஒன்று காங்கிரசினது யோக்கியதையை வெளியிலெடுத்துச் சொல்லி பாமர மக்களை அக் காங்கிரஸ் படுகுழி மோசத்தில் இருந்து தப்புவிக்க வழிதேடவேண்டும் அல்லது காங்கிரசைக் கைப்பற்றி அதிலுள்ள அயோக்கியர்களையும் சுய நலக்காரரையும் வெளியாக்கி காங்கிரசின் மூலம் தேசத்திற்கு உண்மையான விடுதலையும் சுயமரியாதையும் உண்டாகும்படி செய்யவேண்டும் என்கிற ஆசையானது ஜஸ்டிஸ் கக்ஷியைச்சேர்ந்த சில தலைவர்களுக்கு உண்டானதினாலும்மாகாணபொது மகாநாடாகக் கூட்டி பார்ப்பனரல்லாத கனவான்களில் அரசியல் விஷயத்திலும் மற்றும்பல விஷயங்களிலும் அபிப்பிராயபேதப்பட்ட எல்லா கனவான்களையும் அழைத்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்ற நோக்கத்துடனும் அம் மகாநாடு கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் சொல்லலாம் எனவே இம் மாகாண பார்ப்பனரல்லாத பொது மக்களுக்கு இது சமயம் பெரிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

சுயராஜ்ஜியக்கக்ஷியையும் ஜஸ்டிஸ் கட்சியையும் வைது கொண்டு தேசியக்கட்சியின் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கும் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கும் அதே மாதிரி, சுயராஜ்ஜியக்கட்சியை அக்கிரமக் கட்சியென்று சொல்லிக்கொண்டும் ஜஸ்டிஸ் கட்சியை பார்ப்பனரல்லாதார் எல்லாருக்கும் பிரதிநிதியானகட்சி அல்லவென்று சொல்லிக்கொண்டும் சன்மார்க்க சங்கத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு இருக்கும் ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் மற்றும் இதுபோலவே காங்கிரஸ் கொள்கையும் தப்பு சுயராஜ்ஜியக்கக்ஷியார் நடவடிக்கையும் பிடிக்கவில்லை ஜஸ்டிஸ் கக்ஷித்தலைவர்களிடத்திலும்நம்பிக்கை இல்லை என்று சொல்லிக்கொண்டு மந்திரிகளை ஆதரிக்க வேண்டியதுதனது கடமையென்றும்சொல்லிக் கொண்டிருக்கும் ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்க செட்டியாருக்கும் மற்றும் காங்கிரசு நல்லது. அதை நடத்துகிறவர்கள் அயோக்கியர்கள் அவர்களை வெளியாக்கி காங்கிரசைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் ஜஸ்டிஸ் கட்சியின் சமூக சம்பந்தமான கொள்கைகள் சரியானதுதான் ஆனால் அதன் அரசியல் கொள்கை காங்கிரஸ் கொள்கையாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிற ஸ்ரீமான் ஆர். கே ஷண்முகம் செட்டியாருக்கும், மற்றும்யாதொரு கொள்கையும் இல்லாமல்மாத 30 நாள் நடந்தேறவேண்டியதும் 5500 ரூபாய் சம்பளம் பெறுவதும்தவிர அது நிரந்தரமாய் கிடைத்துக்கொண்டிருக்க வேண்டியதற்கு என்ன வேண்டுமானாலும் செய்யத்தயார் என்கிற கொள்கை உடைய மந்திரிமார்களுக்கும் இவர்கள் இத்தனை பெயருடைய கோஷ்டியாருக்கும் பின்பற்றுவோருக்கும் இம்மகாநாடு தாராளமாய் வழி திறந்திருப்பதுடன் இவர்கள் இத்தனை பேரும் சொல்லும் யோசனையை வணக்கத்துடனும் சகிப்புத்தன்மையுடனும் காது கொடுக்கவும் அவற்றிற்குச்சரியான நியாயம் வழங்கவும் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது.

மதுரை மகாநாடும் இப்படியே தான் எல்லோரையும் வரவேற்கக் காத்திருந்தது. ஆனால் சிலருக்கு அது சமயம் பலவித சந்தேகங்களும் அசவுகரியங்களும் ஏற்பட்டிருக்கலாம். இப்போது மதுரை மகாநாடு நடந்த பிறகும் காங்கிரஸ் நடை முறையைக் கண்ட பிறகும் அவரவர்களுக்கு ஏற்பட்டிருந்த சந்தேகங்களும் அசவுகரியங்களும் அநேகமாக ஒழிந்திருக்குமென்றே எண்ணுகிறோம். எப்படியெனில் மகாத்மாவின் நிர்மாணமான திட்டத்தை காங்கிரஸ் உதைத்துத் தள்ளி இருந்துங்கூட ஜஸ்டிஸ் கட்சி அதை ஏற்றுக்கொண்டதும், "இரட்டை ஆட்சியை ஒழிக்கவேண்டும் மந்திரிசபை ஒழிக்கவேண்டும்" என்று காங்கிரஸ் செய்த தீர்மானத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களே உதைத்துத் தள்ளிவிட்டு இரகசியமாய் இரட்டை ஆக்ஷியையும் வெளிப்படையாய் மந்திரிகளையும் சர்க்காரையும் ஆதரித்து வந்தும் ஜஸ்டிஸ் கட்சி தைரியமாய் மந்திரிசபையையும்சர்க்காரையும் எதிர்த்து வருவதும் இதன் பலனை மந்திரி பதவிகளை வலிய தங்களுக்குக் கொடுத்தாலும் எடுத்துக் கொள்ளுவதில்லை என்று உறுதியாய் இருப்பதும் யாவரும் அறிந்த விஷயமே தான்.

ஆதலால் ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் கொள்கைகளிலோ சமூகக் கொள்கைகளிலோ நிர்மாண திட்டத்திலோ இனியாரும் குறைகூறிக்கொண்டுச்சாக்குப் போக்குச் சொல்ல முடியாது. "நடத்துகிறவர்கள் ஒழுங்காயில்லை தலைவர்கள் சரியாயில்லை" என்று சொல்லவோ "அடிப்படைதத்துவம் சரியாயில்லை" என்று சொல்லவோ இனியாருக்கும் இடமும் இல்லை. ஏனெனில் யாவர்களும் வந்து அவரவர்கள் அபிப்பிராயங்களைச் சொல்லி அவற்றை ஒப்புக்கொள்ளாததினாலோ அல்லது "மற்றவர்களை உள் சேர்க்கக்கூடாது ஒரு சிலரிடமே ஆதிக்கம் இருக்கவேண்டும்" என்ற சூழ்ச்சியைக் கண்ட பிறகோ யாராவது அதன் பேரில் குற்றம் சொன்னால் சொல்லலாம் அப்படிக்கு ஒன்றும் இல்லாமல் எல்லோரையும் வரவேற்கத் தயாராயிருப்பதுடன் எல்லோருடைய அபிப்பிராயத்திற்கும் மதிப்புக்கொடுக்கத் தயாராயிருக்கும் போது வருவதற்கு இசையாதவர்கள் பார்ப்பன பயம் காரணமல்லாமல் வேறு சாக்குச் சொல்லவே முடியாது என்றே சொல்லுவோம்.

தவிர மகாநாட்டின் அக்கிராசனர் ஸ்ரீமான் திவான்பகதூர் எஸ்.குமாரசாமி ரெட்டியாரவர்கள் அவரைப்பற்றி நமது மாகாணத்தில் தெரியாதவர்கள்யாரும் இருக்கமாட்டார்கள் அவர்கள் 1907-ம் வருஷத்தில் ஏற்பட்ட வங்காளப் பிரிவினைக் கிளர்ச்சியின் போதே தேசீய விஷயத்தில் ஈடுபட்டவர். தூத்துக்குடி சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குமுக்கியஸ்தராயிருந்து கிராமம்கிராமமாகச் சுற்றி பத்து லக்ஷக்கணக்காக பொருள் வசூல் செய்து கப்பல்கள் வாங்கி நடத்தியும், மற்றும் எவ்வளவோ பிரயாசைப்பட்டவரும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்காக பத்து வருஷ காலத்திற்கு அதிகமாகவே ஒரே கொள்கையுடன் கட்டுப்பாடாயிருந்து நாணயமாக நடந்து வருபவரும், திருநெல்வேலி ஜில்லா கவர்மெண்டு வக்கீலாயிருந்தவரும், ஜில்லாபோர்டு பிரசிடெண்டாக இரண்டுமுறை இருக்கிறவரும், சென்னை சட்ட சபையில் முக்கிய அங்கத்தினராகவும் இருந்து வருகிறவர் எனவே அவரது தலைமைப்பதவி "காங்கிரஸ் தலைவர்கள்" தலைமைப் பதவியைப்போலல்லாமல் கண்ணியத்துடனும், சாமர்த்தியத்துடனும் நடைபெறுமென்பது நமது உறுதி, இப்பேர்ப்பட்ட தலைவர் இந்த நெருக்கடியான சமயத்தில் கிடைத்ததே மகாநாட்டின் பாக்கியமென்றே சொல்லவேண்டும்.

அதுபோலவே வரவேற்புத் தலைவராகிய ஸ்ரீமான் பி. இரத்தினசபாபதிக் கவுண்டர் அவர்களைப் பற்றியும் நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவர் இந்த ஜில்லாவின் பெரும்பாகமான சமூகமாகிய கொங்குவேள்ளாள சமூகப்பிரமுகர்களில் ஒருவர். கொங்கு வேளாளச் சங்கத்திற்கு ஆதிமுதல் காரியதரிசியாகவும், கடைசியாக நடந்த மகாநாட்டிற்கு வரவேற்புத் தலைவராகவும், கோயமுத்தூர் ஜில்லா பஞ்சு வர்த்தகர்களில் முக்கியஸ்தராகவும், செல்வவந்தராகவும், பொது நலசேவையில் உண்மையான பற்றுக்கொண்டவராகவும், உள்ள

கனவான், இந்த ஜில்லாவில் அவருக்குத் தமது சமூகத்திலும் மற்றும் வியாபார சமூகத்திலும் பாமர மக்களிடத்திலும், விசேஷ செல்வாக்குண்டு. எனவே அவரது வரவேற்புத் தலைமையானது யாவருக்கும் திருப்தியைத் தரத்தக்கதாகவே இருக்கும்.

அதன் காரியதரிசிகளோ மிகவும் விசேஷப்பட்டவர்கள்:— ஒன்று ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் எம். எல். சி. ஜில்லா போர்டு பிரசிடெண்டு முனிசிபல் சேர்மென், இரண்டு ஸ்ரீமான் பி எஸ் சாத்தப்ப செட்டியார் காளீஸ்வரர் மில் முதலிய பல மில்லுகளின் ஏஜண்ட் அவரது முயர்ச்சி எல்லோரையும் விட மிகச்சிறந்தது. மூன்று ஸ்ரீமான் சி வி நஞ்சய கவுண்டர் கோயம்புத்தூர் ஜில்லா போர்டுவைஸ்பிரசிடெண்டுக்கும்ஸ்ரீமான் வி. சி.வெள்ளியங்கிரிகவுண்டர் அவர்களின் மருமான், நான்கு பி எஸ் ஜி & சன்ஸ் வெங்கடசாமி நாயுடு ரங்கவிலாஸ் மில் ஏஜண்ட் கமம நாயுடுசமூகப்பிரமுகர் அனேக பெரிய தர்மங்கள் செய்தவரும், ஜில்லாவில் மிகக செல்வாக்குடையவருமாவார்: 5 ஸ்ரீமான் அருணாசலம் செட்டியார் கோயம்புத்தூர் முனிசிபல் வைஸ் சேர்மென் தேவாங்ககுலப் பிரமுகர் பொதுக் காரியங்களில் மிகவும் ஊக்கமாக உழைத்து வருபவர், ஆறு ஸ்ரீமான் நஞ்சுண்டகவுண்டர் முனிசிபல் கவுன்சிலர் ஒரு பெரிய பாங்கின் காரியதரிசி ஒக்கிலிகர் சமூகப்பிரமுகர். இன்னமும் இது போன்ற நிர்வாக சபை அங்கத்தினர்கள் ஆகிய அனேக பெரியோர்களையும் முக்கியஸ்தர்களையும் கொண்ட

இம்மகாநாட்டை விசேஷ மகா நாட்டில் மிக விசேஷமானது என்றுசொல்வது மிகையாகாது.

ஆதலால்மாகாணத்தில்பலபாகங்களிலும் சிறப்பாக தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஜில்லா தாலூகா கிராமங்களில் இருந்தும் தவறாமல் பிரதிநிதிகள் ஆயிரக்கணக்காகவந்து சேர வேண்டியது ஒவ்வொரு உண்மையான பார்ப்பனரல்லாதாரின் கடமையாகும். முக்கிய விசேஷம் என்னவென்றால் ஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, கல்யாணசுந்தர முதலியார் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வி. ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகிய அநேக கனவான்கள் இம்மகாநாட்டிற்கு வரக்கூடும். அவர்கள் யாவரும் வருவதற்குத் தகுந்த அழைப்புகளும் ஏற்பாடுகளும் நடந்துவருகிறது.

இம்மகா நாட்டின் மூலமும் அநேக கனவான்களின் விஜயம் மூலமும் பார்ப்பனரல்லாதசமூகத்திற்குள் ஒருபுதுக்கட்டுப்பாடும் ஒற்றுமையும் பொதுவேலைத்திட்டமும் ஏற்படக்கூடும் என்பதற்கு அனேக ஆதாரங்கள் இருக்கின்றன. யாவரும்தவறாமல்வந்து மகா நாட்டின் உத்தேசத்தை நிறைவேற்றி வைக்கவேண்டுகிறோம்.

பார்ப்பன அயோக்கியத்தனம்.

'அகில இந்திய பிராமண சம்மேளனம்'' என்பதாகப் பேர் கொண்டு தஞ்சாவூர்ஜில்லாவில் உள்ள ஒரு மூலை கிராமத்தில் வக்கீல் பார்ப்பனர், உத்தியோகப் பார்ப்பனர், பஞ்சாங்கப் பார்ப்பனர், காப்பிக்கடைப் பார்ப்பனர், தூதுவப் பார்ப்பனர் ஆகிய பலதிறப்பட்ட சுமார் 100 உருப்படிகள் கூட்டம் கூடி ஒன்று சேர்ந்து ''அகில இந்தியப்பிராமணசம்மேளனம்'' என்பதாகப்பேர் வைத்துக்கொண்டு பல தீர்மானங்கள் செய்து இதை இந்தியாவிலுள்ள இந்துக்கள் என்று சொல்லப்படும் 25 கோடி மக்களுக்கு கட்டுப்பட்டதாக கருதும்படி சூட்சி செய்து இருக்கிறார்கள். அங்கு நடந்த தீர்மானங்களையும் மகாநாட்டின் வரவேற்பு அக்கிராசனர் மகாநாட்டின் தலைவர் ஆகியவர்கள் பிரசங்கங்களும் படித்துப் பார்த்தால் உண்மையான கலப்பற்ற பார்ப்பனரல்லாதார்களின் இரத்தம் கொதிக்காமலிருக்கவே முடியாது. அவ்விருவர் பிரசங்கத்திலும் ஒற்றுமையாகக் காணப்படும் விஷயங்கள் பல இருந்தாலும் அவற்றில் முக்கியமானது இத்தேசத்தில் இந்துக்களில் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் எல்லாம் சூத்திரர்கள் என்றும் க்ஷத்திரியரும் வைசியரும் கிடையாது என்றும் பேசியிருக்கிறார்கள், க்ஷத்திரியரும் வைசியரும் இந்நாட்டில் இல்லை என்பதைப் பொருத்தவரையில் நமக்கு சந்தோஷமே. நாமும் அப்படிகதான் தீர்மானித்திருக்கிறோம். மற்றபடி யார் யார்களை க்ஷத்திரியர்கள் என்றும் வைசியர்கள் என்றும் எண்ணிக்கொண்டு பார்பனர்களைப் போல் பூணூல் போட்டுக்கொண்டு திரிகிறார்களோ அவர்கள்பார்ப்பனர்களிடம் போய் கெஞ்சி தங்கள் க்ஷத்திரிய வைசிய உரிமைகளைக் காப்பாற்றிப் பார்ப்பனர்களின் க்ஷத்திரியர் மக்கள் அல்ல என்பதை திருப்திக் கொள்ளட்டும் நமக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை ஆனால் பார்ப்பனர்கள் தவிர மற்றவர்கள் சூத்திரர்கள் என்று சொன்னதுதான் நமக்கு மிகுதி ரத்தத் துடிப்பையும் உண்டாக்குகிறது.

பார்ப்பனர்கள் இந்த நாட்டுக்குப் பிழைக்க வந்தவர்கள் என்பதில் யாருக்கும் ஆக்ஷேபணை இருக்காது என்றே நினைக்கிறோம். அவர்கள் ஒரு இழிந்த ஜாதியார் என்பதிலும் யாருக்கும் ஆக்ஷேபணை இருக்க நியாயமில்லை. நமது அகராதிகளிலேயே ஆரியர் என்றால் மிலேச்சர் என்று குறிப்பிடப்பட்டிருப்பதும் அதுவும் அவர்களால் ஒப்புக் கொண்ட அகராதிகளில் காணப்படுவதும் அவர்களது நாகரீகமோ அவர்களால் எழுதி வைத்திருக்கும் வேதம்,சாஸ்திரம்,ஸ்மிருதி,புராணம், இதுகளால்,அவர்கள் தமிழ் மக்களாகிய நமது நாகரீகத்திற்கு எவ்வளவு கீழ்பட்டது என்பதும் அருவருக்கத்தக்கது என்பதும் ஆராய்ச்சி உள்ளவர்களுக்கு நன்றாகத்தெரியும். ''அதாவது பார்ப்பனஸ்திரீகள் விபசாரம் செய்துவிட்டால் கர்ப்பம்தரிக்காமலிருந்தால் வீட்டிற்குத்தூரமானவுடன் அந்தத்தோஷம்தீர்ந்து விடுகிறது'' என்றுபாராசர ஸ்மிருதி பிராயச்சித்தகாண்டம்4வதுகாண்டம்2-வதுசுலோகத்தில்சொல்லப்பட்டிருக்கிறது. அதேசுலோகத்திற்கு விரிவுரைஎழுதுகையில்பிராமணஸ்திரீசூத்திரனைப் புணர்ந்து விட்டால் மாத்திரம் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்றும் அதுவும் தினம் ஒரு கவள அன்னம் வீதம் 15 நாளைக்குக் குறைத்துக்கொண்டு வந்து 16ம் நாள் முதல் தினம் ஒரு கவள அன்னம் வீதம் உயர்த்திக்கொண்டு வந்து விட்டால் போதுமானது என்று இருக்கிறது இதுதான் பிராமண ஸ்திரீகளின் விபசாரத்திற்குப் பிராயச்சித்தம். மற்றபடி கர்ப்பம் தரித்துவிட்டால் மாத்திரம் மிகவும் தோஷமான தென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேஸ்மிருதி பிராயச்சித்த காண்டம் 7-வது அத்தியாயம் 23-வது சுலோகத்தில் பூமியானது எப்படியோ அப்படியே ஸ்திரீகளுமாகையால் அவர்கள் தூஷிக்கத்தக்கவர்கள் அல்லர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறது. இதன் விரிவுரையில் பூமியை யார் தொட்டாலும் உபயோகப்படுத்தினாலும் எப்படி சுத்திசெய்வதன் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதோ அப்படியே ஸ்திரீகளும் சண்டாள சங்கமம் செய்த ஸ்திரீகளும் பிராயச்சித்தம் செய்து அங்கீகரித்துக் கொள்ளலாம் என்று எழுதி இருக்கிறது.

அன்றியும் எருமை கழுதை ஒட்டகம் இவைகளையும் புணரும் பிராமணன் ஒரு நாள் உபவாசமிருப்பதால் சுத்தனாகிறான் என்று அதேஸ்மிருதி அதே அத்தியாயம் 14-வது சுலோகத்தில் சொல்லியிருக்கிறது. இதுபோலவே தனது தாயையும் குமாரத்தியையும் சகோதரி முதலியவர்களையும் புணரும்படியானதிலும் அறிந்தும் அறியாமலும் இச்சையாகவும் நடந்துகொள்ளும் விஷயத்திலும் பிராயச்சித்தங்கள் சொல்லி இருக்கிறது. இப் பிராயச்சித்தங்களில்பெரும்பாலும் பிராமணருக்குக் கொடுக்கவேண்டியதும் பட்டினி முதலியதுகள் இருக்க வேண்டியதுமான சாதாரண பிராயச்சித்தங்களேதான், இன்னும் அதுகளில் உள்ள ஆபாசங்கள் அநேகம். இவற்றை நாம் எடுத்துச்சொன்னதின் கருத்து என்னவென்றால் எப்படிப்பட்ட யோக்கியர்கள் நம்மை சூத்திரர்கள் அதாவது பார்ப்பனர்களுடைய வைப்பாட்டி மக்கள் பார்ப்பனருக்குத் தொண்டுசெய்யக் கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்கள் என்று சொல்லுகிறார்கள் என்பதைக் காட்டவும் நமது ராஜரீகங்களுக்கும் அவர்களது நாகரீகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக்காட்டி யார் உயர்ந்தவர்கள் யார் தாழ்ந்தவர்கள் என்பதைக் காட்டவுமேதான் எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

தற்காலம் நமது நாட்டில் உள்ள மக்களின் உணர்ச்சியும் அதனால் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியையும் நன்றாகப்பார்த்துக் கொண்டிருக்கிற பார்ப்பனர்கள் ''பார்ப்பன மகா நாடு'' கூட்டி ''நாம் பிராமணர்கள் தான் மற்றவர்கள் நமது வைப்பாட்டி மக்கள்தான் சண்டாளர்கள் தான்'' என்பதாகத்தீர்மானம் செய்திருப்பதாக வெளிப்படுத்துவார்களானால், அவர்களின் தைரியத்தையும், அயோக்

யத்தனத்தையும் என்னவென்று சொல்வது? இன்னமும் அம்மகாநாட்டில் தீர்மானித்திருக்கும் தீர்மானப் பிரகாரம் ஒவ்வொரு கிராமத்திலும் பார்ப்பனீய சபைகளும் பிரசாரங்களும் நடைபெற வேண்டுமென்றும் பார்ப்பனரல்லாதார் கோரும் சீர்திருத்தங்களையெல்லாம் கண்டித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருப்பதுடன் மகாத்மாவின் சமூகத்திருத்தக் கொள்கைகளையும் கண்டித்துப்பேசப்பட்டிருக்கிறது.

இக்கக் கூட்டத்திற்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களும் நீதி நிர்வாக இலாக்காக்களில் தீர்ப்புச்சொல்லக்கூடிய அதிகாரிகளும் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள் என்றால் நமது சுயமரியாதையைப் பொருத்த அல்லது சுயமரியாதை விஷயம் சம்மந்தப்பட்ட விஷயங்களில், இவர்களுடைய தீர்ப்புகள் எப்படி இருக்கும் என்றுசொல்லவும் வேண்டுமா? என்று கேட்கின்றோம். இந்தக் கூட்டத்தார்தானே ஆகிபனியும் நமக்குச் சுயராஜ்ஜியம்வாங்கிக்கொடுக்கிறவர்களாகஇருக்கிறார்கள் இவர்கள் வாங்கிக்கொடுக்கும் சுயராஜ்ஜியமும் நமது பெண்கள் மலையாளம் போல் அவர்களுக்கு வைப்பாட்டிகளாயிருக்கத்தானே அல்லாமல் வேறு என்னவிதமான சுயராஜ்ஜியம் இவர்களால் வரக்கூடும், என்பது நமக்கு விளங்கவில்லை, மகாத்மா கேட்கும் சுயராஜ்ஜியமே இந்த பார்ப்பனர்களுக்கு தேசத்துரோகமாகப்பார்ப்பனத்துரோகமாய் இந்துமதத்து வேஷமாய் போய் விட்டது. இப்படியிருக்க நம்மவர்கள் இதைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் இனியும வயிற்றுப்பிழைப்புச் சண்டையே அதாவது பார்ப்பனர்கோரும் சுயராஜ்யச் சண்டையேபலமாகக்கிளப்பிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள் இந்தப்பாழும் சுயராஜ்ஜியத்தினால் யாருக்கும் என்ன பலன்கிடைக்கப்போகிறது. என்பது இன்னமும் பாமர மக்கள் அறியாததே நமது நாட்டின் துரதிஷ்டமாயிருக்கிறது, அறிந்திருந்தால் இந்தப் பார்ப்பனசமமேளனக் கொடுமை இன்னும் நமது நாட்டில் உயிர்வைத்துக் கொண்டிருக்க நியாயமே இல்லை. ஆகலால் பார்ப்பனரல்லாத மக்களே! இந்தப் பார்ப்பனக்கொடுமையால் இருந்தும் அவர்களது வைப்பாட்டி மக்கள் என்கிற இழிகையில் இருக்கும் தப்ப என்ன ஏற்பாடுகள் செய்யப்போகிறீர்கள்? கிராமங்கள்தோறும் சுயமரியாதைச் சங்கங்கள் ஏற்படுத்தி பார்ப்பனக்கொடுமையை ஒழிப்பது தவிர நமக்கு வேறுகதியில்லை, சுயராஜ்ஜியப பேச்சு பேசிக் கொண்டு பார்ப்பனர்கள் காலுக்கு முத்தமிட்டுத தேசத்தின்பேரால் பிழைப்பவர்கள் பிழைக்கட்டும். சுயமரியாதையில் கவலை உள்ளவர்கள் இந்த வேலை பார்த்தால் போதும்.

ஸ்ரீமான் ஜோசப்பின் குட்டிக்கரணம்.

சென்னை அரசாங்கத்தில் கிருஸ்தவர் என்கிற சலுகையின் பேரில் ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியாருக்கு மந்திரி பதவி கிடைத்ததிலிருந்து ஸ்ரீமான் நமது ஜோசப்புக்கு நாக்கில் தண்ணீர் சொட்ட ஆரம்பித்து விட்டது, அதோடுமாத்திரமல்லாமல் அந்த மந்திரி பதவி பார்ப்பனர்கள் மூலமாகத் தான் விற்கப்படுகிறதென்கிற ஞானமும் ஏற்பட்டு விட்டது. அதோடு கூட அம்மந்திரி பதவிக்கு பார்ப்பனர்களுக்குக் கொடுக்க வேண்டியவிலை "ஜஸ்டிஸ்" கட்சியைத் திட்டி பார்ப்பனரல்லாதாரை காட்டிக்கொடுக்கவேண்டியது தான் என்கிற முடிவும் அவருக்கு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

சமீபத்தில் மதுரையில் பேசினதும் ஸ்ரீ சத்தியமூர்த்தியைப்புகழ்ந்ததும் மற்றும் அவர் தெரிவித்த அபிப்பிராயமும், ஸ்ரீமான் ஜோசப்பின் புதிய பிறப்பைக்காட்டுகிறது ஸ்ரீமான் சத்தியமூர்த்தியை ஒரு மனிதர் புகழ்வாரானால் அம்மனிதருடைய யோக்கியதை இன்னதென்று நாம் சொல்லிக்காட்டவேண்டியதில்லை. உதாரணமாக "மலம் நல்ல வாசனையாயிருக்கிறதென்று ஒருவர் சொல்லுவாரானால் அவர் மூக்கின் யோக்கியதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா"? என்ற பழமொழி ஒன்றுண்டு அதுபோலவே ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் யோக்கியப்பொறுப்பும், சாமையும் நன்றாக அறிந்த ஸ்ரீமான் ஜோசப்பு அவர்கள் அவரைப் புகழ்வதும், சுயராஜ்யக்கட்சியின் யோக்கியதையும், தென்னாட்டுப் பார்ப்பனர்களின் யோக்கியதையும் நன்றாக அறிந்த ஸ்ரீமான் ஜோசப்பு இவைகளுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுவதுமானால் பிசு இல்லாமல் பேசுகிறார் என்று யாராவது நினைக்க முடியுமா? இதன் பயனாக கிருஸ்தவர் என்கிற முறையில் ஸ்ரீமான் ஜோசெப்புக்கு ஒரு சமயம் மந்திரி உத்தியோகம் அல்லது அதற்கு சமானமான பதவிகிடைப்பதாயிருந்தாலும் ஸ்ரீமான் ஜோசப்பின் வாழ்க்கையின் பெருமை அடியோடு ஒழிந்து போகுமென்றே பயப்படுகின்றோம்.

இந்து மதம் என்கிற புரட்டைவைத்துக் கொண்டு பார்ப்பனர்கள், தாங்கள் பெரிய ஜாதியார்கள் என்று சொல்லிக் கொண்டும் அம்மதத்தினர் என்பவர்களுக்குள்ளாகவே தாங்களொழிந்த மற்றவர்களை தாழ்ந்த ஜாதியாராக்கி நிரந்தரமாய்ப் பிழைக்க ஏற்படுத்திக் கொண்டிருக்கும் "அரசியல்" இயக்கம் என்பவைகளிலுள்ள சூழ்ச்சியை வெளிப்படுத்தப் பார்ப்பனரல்லாதார் பார்ப்பனருடன் சண்டை இடும்போது ஸ்ரீமான் ஜோசெப் போன்றவர்கள் இரு (ஆட்டுக்குட்டி) வர் சண்டையிலிருந்து ஒழுகும் இரத்ததைக் குடிக்கும் (குள்ள நரியாக) வீரராகத் தோன்றியது மிகவும் பழிசொல்லத்தக்க காரியம். தேசாபிமானம் என்பதற்கு ஸ்ரீமான் ஜோசெப் என்ன பொருள் கொண்டிருக்கிறார் என்பது விளங்கவில்லை. தென்னாட்டுப் பார்ப்பனர்களின் அயோக்கியத் தனத்தைத்தான் ஸ்ரீமான் ஜோசெப் அவர்கள் தேசாபிமானம் என்று கொள்வாரானால் அவரையும் பார்ப்பனக் கூட்டத்தில் சேர்த்துததான் கணக்கு பார்க்கவேண்டும், ஏனெனில் ஸ்ரீமான் ஜோசெப்புக்கும் பார்ப்பனருடன் சேருவதற்கு உரிமையுண்டு. என்னவென்றால் "இந்துக்"களில் பார்ப்பனரல்லாதார் அதிகமானவர்கள். பார்ப்பனர்கள் மிகுந்த குறைந்த எண்ணிக்கை உள்ளவர்கள். குறைந்த எண்ணிக்கையுள்ளவர்கள், அதிக எண்ணிக்கை உள்ளவர்களை எய்தி ஆதிக்கம் பெற வேண்டுமானால் ஏதாவது ஒரு சூழ்ச்சியின் மூலம் தான் முடியும் என்பது பார்ப்பனர்களின் முடிவு. அது போலவே ஸ்ரீமான் ஜோசெப் அவர்களும் தங்கள் குறைந்த எண்ணிக்கையை உத்தேசிக்கும் போது தாங்களாகத் தனித்த ஒரு தந்திரமோ அல்லது பார்ப்பனர்களின் தந்திரத்தில் கூட்டு வியாபாரமோ செய்ய வேண்டியதுதான் கிரமமானது என்கிற முடிவுக்கு வரவேண்டியவர் தான். ஆனால் யோக்கியமான முறையில் கிடைக்காத எந்த ஆதிக்கமும் நிலைக்காது என்பதும், நிலைத்தாலும் வாசனையுள்ளதாயிருக்காது என்பதும் எமது துணிவு.

கோவில்பட்டி பக்திவிளை கழகம் இருபத்திரண்டாவதாண்டு நிறைவு விழா திருவிடர்கழகம் பதினெட்டாவதாண்டு நிறைவுவிழா.

எல்லாம் வல்ல இறைவன் திருவருட்டுணையாலும், திருவாவடுதுறையாதீனம் மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக மூர்த்திகளின் பொருட்டுணையாலும் மேடி இரண்டு விழாக்களும் முறையே மெய்கண்டாருண்டு 709 ஆனித்திங்கள் 4-5-வது நாட்களில் (1927-ஆம் ஜூன்மாதம் 18, 19 தேதிகளில், கோவில்பட்டி போர்டு ஐஸ்கூலில் நடைபெறும். ஜூன் மாதம் 18 தேதி பக்திவிளைகழக இருபத்திரெண்டாவதாண்டு நிறைவுவிழாவில் சென்னை அட்வோகேட், மறைத்திருவன் கா சுப்பரமணிய பிள்ளையவர்கள் எம். ஏ., எம் எல். தலைமை பூண்பதாயும் ஜூன் 19 தேதி திருவிடர் சமூகம் 18 வதாண்டு நிறைவுவிழாவில் வைக்கம் வீரர் உயர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள், "குடி அரசு"ப்பத்திராதிபர் தலைமை பூண்பதாயும ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். என காரியதரிசி அறிவிக்கிறார்.

"சுயமரியாதை" என்னும் வாரத் தமிழ்ப்பத்திரிகை

வேளாங்கண்ணியினின்று 1927-வருஷம் ஆகஸ்டு மாதம் முதற்கொண்டு வெளிவரும் தமிழ்ப் பண்டிதர் சோலைகிழார் க அருணாசலனுமே இப்பத்திரிகைக்கு ஆசிரியரும் சொந்தக்காரருமாவர்.

இதில் தேசிய இராஜிய விஷயங்களும் பிராமணர் அல்லாதார் முன்னேற்ற விஷயங்களும் மற்றும பலவும எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பெறும்

வருஷம் சந்தா ரூபாய் 3. மூன்று தான்

மானேஜர்,
A. சிவப்பிரகாசம்,
"சுயமரியாதை" ஆபிஸ்
வேளாங்கண்ணி.

மலையைக் கெல்லி எலியைப் பிடித்தார்கள்.

சேலம் ஜில்லாபோர்டு தலைமைப் பதவிக்கு திருவாளர் எல்லப்ப செட்டியார் அவர்கள் வரக்கூடாதென்பதாக சேலத்திலுள்ள சில பார்ப்பனர்களும், அவர்களது தயவில் முன்னுக்கு வரலாமென்று கருதி அவர்களது வாலைப்பிடித்துக்கொண்டு திரியும் சில பார்ப்பனரல்லாதார்களும் ஒன்றுகூடிச் சுயமரியாதைக்குப் பங்கமென்பதனையும் கூட்டத்திற்கனுதாபம் காட்டி வருகிற மந்திரியைப் பிடித்துக் கசக்கி என்னென்னமோ சூழ்ச்சிகளெல்லாம் செய்து பார்த்தும் வேண்டுமென்றே மனச்சாட்சிக்கு விரோதமான எத்தனையோ அக்கிரமமான உத்திரவுகளைப் போடச்செய்துங்கூடயோக்கனாம் மந்திரி சுப்பராயனுடைய அக்கிரமங்களையும் ஜெயித்து திருவாளர் எல்லப்ப செட்டியாருடைய [தலைவர்] தேர்தல் சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. பார்ப்பனர்களால் செய்யப்பட்ட இவ்வளவு சூழ்ச்சிகளாலும் கனம் சுப்பராயனின் மந்திரி தன்மை மானங்கெட்டு நாடு சிரிக்க பேற்பட்டதுதானே தவிர பார்ப்பனர்களுக்காவது திரு. எல்லப்ப செட்டியாருக்காவது ஒரு வித நஷ்டமும் ஏற்பட்டு விடவில்லை

நமது நாட்டுச்சரித்திரத்தில் ஆயிரக்கணக்கான வருடங்கள் தொட்டு நாளதுவரையில் யாராவது ஒரு பார்ப்பனரல்லாதார் எந்தப் பார்ப்பனருடைய பேச்சையாவது கேட்டு யோக்யமடைந்ததாகவாவது முன்னுக்கு வந்ததாகவாவது, எந்த ஆதாரத்தைக்கொண்டாவது ருஜுப்பிக்கமுடியுமா? பார்ப்பனரல்லாதாரை ஒழிப்பதற்காக பார்ப்பனர்களுக்கு கை ஆயுதமாக இருந்த பார்ப்பனரல்லாதார்களில் யாராவது ஒருவர் பார்ப்பனர்களால் சபிக்கப் படாமலும், தூஷிக்கப்படாமலும் தப்பித்துக்கொண்டவர்கள் ஒருவராவது இருக்கிறார்களா? இன்றைபதினம பார்ப்பனர்களாலும், அவர்கள் பத்திரிகைகளாலும் வசைகேட்டுக்கொண்டு இருக்கும் தேசீய வீரர்கள் தேசபக்தர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களெல்லாம் ஒரு காலத்தில் பார்ப்பனர்களின் கை ஆயுதங்களாக இருந்து கொண்டு தேசபக்தர்கள், 'தேசாபிமானிகள்' 'தலைவர்கள்' 'பிரமரிஷி' 'ராஜரிஷி' என்கிற பெருமையை அடைந்து கொண்டிருந்தவர்கள்தான் ஆயினும்பார்ப்பனர்கள்தங்கள்வேலை முடிந்தவுடனே திடீரென்று கீழே தூக்கிப்போட்டு மிதித்து விடுகிறார்கள். உதாரணமாக இப்பொழுது நமது நாட்டிலுள்ள பார்ப்பனர்களெல்லாம் ஒரே அடியாய் ஸ்ரீமான்கள் ஷண்முகம் செட்டியார், வரதராஜுலு நாயுடு, எஸ். முத்தையா முதலியார் ஆகியவர்களை வைதவண்ணமாக இருக்கிறார்கள். இவர்களை இதே பார்ப்பனர்கள் எவ்வளவு தூரம் தூக்கிவைத்து கவி பாடிக்கொண்டு பின்னால் திரிந்தார்கள் என்பது ஜனங்கட்குத் தெரியும். பார்ப்பனர்கள் தனியாய் எங்கேயாவது போனால் பொது ஜனங்களால் கல்லடி சாணி உருண்டை முதலிய மரியாதைகள் கிடைக்கும் என்று தோன்றுகிற இடங்களுக்கெல்லாம் டிக்கனவான்களைக் கூட்டிக்கொண்டு போவதும் அவர்களை வண்டியில் வைத்து இழுப்பதும் ஜே! போடுவதும் அவர்களது படங்களை பள்ளி அறையில்வைத்துப்பூஜித்துவிட்டும்கொஞ்சம்பேசாவதுஇவர்களுடைய அக்கிரமங்களை எடுத்துச்சொல்ல ஆரம்பித்து விட்டால் உடனே அவர்கள் மேல் கத்தி தீட்டுவதுமான செய்கைகளை நாம் பார்த்துக்கொண்டே வருகிறோம். அல்லாமலும் சுயமரியாதையுள்ள எந்தப் பார்ப்பனரல்லாதாரையாவது தங்களுடன் சேர்த்துக்கொண்டோ அல்லது வையாமலாவது இருக்கிறார்களா என்பதைப் பார்த்தால் இது அனுபவத்தில் தெரியவரும். இவற்றை எதற்காகச் சொல்லுகிறோமென்றால் இதே ஸ்ரீமான் சுப்பராயன் அவர்கட்கும் சேலத்தில் உள்ள அவரது கோஷ்டிக்கும் கொஞ்சம் சுயமரியாதை உதயமான உடனே இவர்கள்பேரிலும் இதே பார்ப்பனர்கள் கத்தி தீட்டுவார்களென்பதை அறிவுறுத்துவதற்காகவேயன்றி வேறல்ல.

திரு. எல்லப்பசெட்டியாரின் வெற்றியானது பார்ப்பன சூழ்ச்சியின் தன்மையை வெளிப்படுத்தவும், பார்ப்பன சூழ்ச்சியினின்று தப்புவதானால் எவ்வளவு பிரயாசை இருக்கிறதென்பதை வெளிக்காட்டவும் ஒரு அறிகுறியாகக் கொள்ளலாமே யல்லாமல் மற்படி பிரமாதமாய் பாராட்டத்தகுந்த விஷபம் அதில ஒன்றுமில்லையென்பதே எமது அபிப்பிராயம்,

ஆரியப் பார்ப்பனர்களின் யோக்கியதை

சத்தியம் என்பது அவர்கள் பெரியோர் தேடிவைத்த சொத்து

சென்ற வாரம் தூத்துக்குடியில் நடந்த பார்ப்பனப்பிரசங்கத்தில் ஸ்ரீமான்கள் M.K. ஆச்சாரியர் பல உபன்யாசங்கள் செய்தாராம். அவர்கள் (டி. ஆச்சாரியார்) பேசும்போது வரதராஜுலு நாயுடு ஒரு போக்கிரி என்றும் தான் ஒருநாளும் பார்ப்பனப்பிள்ளை சாப்பிடுவதை பார்ப்பனரல்லாத குழந்தை பார்த்துவிட்டால் பலநாள் பட்டினி கிடப்பேன் என்று சொல்லவில்லை என்றும் உறுதி கூறினாராம். பார்ப்பனர்களுக்கு பொய் சொல்வதென்றால் அது அவர்களுடைய வேதபாராயணம் செய்வதுபோலும். "ஏக தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பொய் பேசுவதற்கு அளவே இல்லை என்பதற்கு ஆதாரமாக சென்ற தேர்தலுக்கு ஆள்கள் சேர்க்கும் முறையில் ஸ்ரீமான்கள் நரசிம்மராஜு ராமலிங்கம் செட்டியார் இன்னும் மற்றவர்களும் ஆந்திரதேசத்துப் பத்திரிகைகளும் வண்டிவண்டியாய் ருஜு செய்தன.

ஆனால் ஸ்ரீமான் அய்யங்காரோ தோள் மேல் தொண்ணூறு அடி அடுக்காலும் குடைந்துவிட்டால் ஒன்றும் சேதிக்காது என்று சொல்வதுபோல் அத்தனையும் ஜீரணம் செய்துகொண்டு இனியும் "தலைவராகவே" விளங்குகிறார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளின் பொய்மை நிரூபிக்க யாவரும் பிரயத்தனப்பட வேண்டியதே இல்லை என்று ஆய்விட்டது ஏனெனில் "ஜஸ்டிஸ் திராவிடன்" பத்திரிகைகள் சாஸ்திரிகளின் கொக்கலே ஹால் பிரசங்கத்தின் பேரிலேயே முதலில் அண்டப்புளுகர் என்கிற பேரைக் கொடுத்தது ஸ்ரீமான் சாஸ்திரிகள் அது பொய் என்று சொல்லி அதில் செய்துகொண்டதின் பேரில் மிஞ்சினதான கோர்ட்டின் அப் பத்திரிக்கைகள் ஆகாசப் புளுகர் என்கிற பெயர் கொடுத்திருக்கிறது. அதை சாஸ்திரியார் ஒப்புக்கொண்டு தாக்ஷண்யமாய் ஏற்றுக்கொண்டு மௌனமாகவே இருந்துவருகிறார்.

நமது ஸ்ரீமான் டி. கே. ஆச்சாரியர் அவர்களோ இப்போது ஸ்ரீ சத்தியமூர்த்தி பேரில் பொறாமை கொண்டு பொய்யில் போட்டிபோட வந்துவிட்டார். அதாவது தான் திருச்சி தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிகூட்டத்தில் ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியார் சந்தானம் முதலிய பார்ப்பன "தேசபக்தர்கள்" "தியாகமூர்த்திகள்" முன்னிலையிலும் மற்றும் பல பார்ப்பனரல்லாதார் முன்னிலையிலும் "ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு ஆதிதிராவிடக் குழந்தை பார்த்துவிட்டால் ஒரு மாசம் பட்டினி கிடப்பேன்" என்று சொல்லிவிட்டு இப்போது சொல்லவே இல்லை என்கிறார். முக்கியமாக நமது நாட்டு அரசியல் பார்ப்பனர்களுக்கு பொய்சொல்லுவது என்ற குணம் தான் சிறந்த யோக்கியதையாக விளங்குகிறது. இம்மாதிரி பொய்பேசும் ஆசாமிகளுக்குத்தான் தேசபக்தர் என்கிற பெயர் பெரிதும் பொருந்தக்கூடும், ஸ்ரீமான் யம். கே. ஆச்சாரியார் இவ் விஷயத்தில் உண்மை சொல்லும் வரையிலும் அல்லது அவர் அரசியல்போரால் பிழைப்பதை விட்டுவிட்டு வேறு வழியில் பிழைப்புத் தேடிக் கொள்ளுகிறவரையிலும் பொய்யர் என்கிற அடைமொழியை நமக்கு ஞாபகமிருக்கும் போதெல்லாம் சேர்த்தே அவர் பெயரை வழங்குவோம் என்பதாக தெரிவித்துக் கொள்ளுகிறோம். "தமிழ் நாடு" பத்திரிக்கையும் இதை பின்பற்றுவது நியாயம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏனெனில் அப் பத்திரிகை தலைவரைப்பற்றித்தான் தான் சொன்ன வார்த்தையை இல்லை என்று மனமறிந்த பொய் சொல்லுவதுடன் குருபர் என்றும் சொல்லுகிறது. ஒரு சமயம் ஸ்ரீமான் நாயுடுகார் பல காரணங்களால் மன்னித்தாலும் மன்னிக்கக்கூடும்.,

"அதிவேத ஆச்சரியம்" என்னும் ஆரூடம்,

கைகண்ட பலன்! தகுந்த விடைகள். தகுந்த விடைகள்! எதிர் கால பலன் கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று மேற் கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு தபால் செலவு வேறு இன்னும் வேறுவிஷயங்களுக்கும் மெக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

வி. எஸ். அய்யர்
சுப்ரமணிய உபாசி.
பழனி P. O. (S. I.)

மந்திரிகளின் நியமனம்

ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிபதவியில் இருந்த காலத்தில் யாருக்காவது ஸ்தல ஸ்தாபனங்களில் நியமனம் செய்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் நமது பார்ப்பனர்கள் ஒவ்வொரு பொய்க்கதையைக் கட்டி பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தூஷித்துக்கொண்டு பாமர மக்களுக்கு அவ்வியக்கத்தினிடம் அருவருப்புண்டாகும்படி எவ்வளவோ சூழ்ச்சிகளெல்லாம் செய்துகொண்டு வந்தது. பொது ஜனங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அம் மாதிரி நியமனங்கள் பார்ப்பனர்களுக்காவது அக்கோஷ்டியைச்சேர்ந்த பார்ப்பனரல்லாதாருக்காவது கிடைத்துவிட்டால் அதைப் பற்றி வெளியிலே பேசாமல் ரகசியமாக அநுபவித்துக்கொண்டுவந்ததும் யாவரும் அறிந்தது. உதாரணமாக ஸ்ரீமான் வி. வி. வெங்கட்டராமன ஐயங்காருக்கு கோயமுத்தூர் ஜில்லாபோர்டுக் நியமனம் செய்தகாலத்தில் இந்தப்பார்ப்பனர்கள் ஒருவார்த்தையாவது பேசவேஇல்லை. அதேசமயத்தில் சென்னை முனிஸிபாலிடிக்கு ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியாரை அதே மந்திரிகள் நியமனம் செய்தகாலத்தில் கொல்லைவழி பிரவேசமென்று எழுதி இருந்தார்கள். அதற்குச் சமாதானமாக தேர்தலில்தோற்றவர்களை நியமனம் செய்வதுதான் கொல்லைவழி பிரவேசமேயொழிய தேர்தலுக்கு நின்று வெற்றிபெறத்தக்கயோக்கியதை இல்லாதவர்களை நியமிப்பது கொல்லைவழிப்பிரவேசமல்லவென்று சொல்லிவிட்டார்கள், ஆனால் கீழே குறிப்பிடப்போகும் சம்பவத்தை நமது பார்ப்பனர்கள் என்னவென்று சொல்வார்களோ? தெரியவில்லை. கோயமுத்தூர் ஜில்லாகல்விச்சபைக்குசமீபத்தில் நியமனம் செய்யப்பெற்றிருக்கும் மாதிரியும் அப்பொழுது சத்தம் போட்ட பார்ப்பனப்பத்திரிகைகளுக்கு இப்பொழுது கண்ணே இல்லையா? புத்திதான் இல்லையா? என்பதும் வாசகர்களால்தான் நிர்ணயிக்கப் படவேண்டும் அதாவது ஷை சபைக்குச் சமீபத்தில் சர்க்காரால்நியமனம் செய்யப்பட்ட ஸ்ரீமான், டி. எம். ராமசந்திரன் செட்டியார் என்பவர் ஜில்லாஸ்தலஸ்தாபன மூலியமாய் செனட்டிற்கு நின்று வெகு வித்தியாசமான ஓட்டுகளால்தோல்வியுற்றவர் அதாவது இவர்பட்டதாரி என்கிற பெருமையுடையவராக இருந்து கோயமுத்தூர் டவுன முனிஸிபல் கவுன்ஸிலிலேயே 30 ஓட்டுகளுக்குமேல் இருந்தும்இவருக்குப்போட்டியாகநின்றவர் பட்டதாரி அல்லாதவராக இருந்தும் வெளியூர்க்காராக இருந்தும் அவருக்குச்சுமார் 60 ஓட்டுகள் கிடைத்ததுமல்லாமல் திரு. செட்டியார் 10 ஓட்டுகள் தான் பெற்று தோல்வியடைந்தார் எஜுகேஷன்கௌன்சிலுக்கும் கோயமுத்தூர் முனிஸிபாலிடி மூலியமாக நின்று வேறொரு பட்டதாரி அல்லாதவர் இவருக்குப்போட்டியாக நிற்க இவர்வெற்றிபெறமுடியாமல் பின்வாங்கிக்கொள்ளவேண்டியதாகப்போய்விட்டது. தவிர திரு. செட்டியார் அவர்களுடைய வகுப்பில் யாருக்கும் அந்த ஸ்தானமில்லை. ஆதலால் அவ்வகுப்பாருக்காக செட்டியாருக்குக்கொடுக்கப்பட்டதென்று சொல்லுவதாக இருந்தாலோ அதுவும் இல்லை ஏனெனில் அந்த வகுப்பில் ஸ்ரீமான் செட்டியார் குடும்பத்திலேயே ஸ்ரீமான் செட்டியாரின் தமயனாருடைய குமாரரின் மனைவியாரும் தமது சின்ன மாமனாரின் குமாரத்தியும் ஆகிய ஸ்ரீமதி லலிதாம்பாள் அவர்கள் பெற்றனவே அப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் அப்படி இருக்க தோல்வியுற்றவரும், அதே வகுப்பில் மற்ற ஒரு நியமனம் பெற்ற வகுப்பினரும் ஆகிய கனவானை எதற்காக மந்திரி நியமித்தார். அந்தச் சபைக்கு லாயக்குள்ள வேறு கனவான்களாவது அல்லது அச்சபையில் பிரதிநிதித்வமடையாத வேறு வகுப்பாராவது இல்லை என்கிற காரணத்தினாலா? அல்லது மந்திரிகனம் டாக்டர் சுப்பராயன் அவர்கட்கு நியமனம் பெற்ற ஸ்ரீமான். செட்டியார் விருந்து முதலானது செய்து மரியாதை செய்தார் என்பதற்காகவா? இதைப்பற்றி எந்தப் பார்ப்பனப் பத்திரிகையாவது இதை அவர்களது நிருபர்களாவது பிரஸ்தாபித்தார்களா? எந்த சட்டசபை வாயாடிகளாவது வெளிப்படுத்தினார்களா என்று கேட்கின்றோம்? இதுஎப்படியோ இருக்கட்டும். இந்த நியமனத்தினால் பெரிய தீமையோ நன்மையோ ஏற்பட்டதாக நாம் சிறிதும் கவலைப்படவில்லை. அல்லது ஸ்ரீமான் செட்டியார் அந்த ஸ்தானத்திற்கு லாயக்கில்லாதவர் என்றும் சொல்லவதற்கு வரவில்லை. நமது நாட்டுப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லார் கக்ஷி மந்திரிகளின் பேரில் சொல்லிக்கொண்டுவந்த குற்றங்களும் அவர்களுக்கு விரோதமாகச் செய்துகொண்டுவந்த பிரசாரங்களும் யோக்கியமானதா? அயோக்கியத்தனமானதா? என்பதையும் இவைகள் தேசத்திற்காக செய்யப்பட்டவைவா? அல்லது பார்ப்பனர் ஆதிக்கத்திற்காகச் செய்யப்பட்டவைவா? என்பதைப்பொது ஜனங்கள் அறிவதற்காக வேஇதை குறிப்பிடுகிறோம்.

பட்டுக்கோட்டை.

மேலைத்தெருவு திராவிட சங்கம் 1927 வருஷம் ஜனவரி மாதம் 23 தேதி முதல் நாளது தேதி வரையிலும் திராவிடச்சங்கம் ஏழை உபாத்தியாயர்களின் மூலமாகச் சங்கம் ஒன்று நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. திருவாளர்கள் 1 எம்.மாரிமுத்துத்தலைமையுள்ளவர் 2.எம்.முனுசாமி காரியதரிசி 3.வி.சொக்கலிங்கம் உதவி காரியதரிசி 4. எம் சுப்பையன் 5, எம். வெள்ளையப்பா 6 ஏ. சார்லஸ் தனராசு 7 கே. பக்கிரிசாமி 8 கே ஆறுமுகம 9 ஆர் சின்னாண்டு 10 என். சாம்பிநன் 11 சி. பெத்தான் 12 வி. முனியன் 13, ஆர் செல்லமுத்து 14 ஆர். ஆறுமுகம் 15 முத்தையா முதலியவர்கள் அங்கத்தினர்கள்

12-6-27 ஞாயிற்றுக்கிழமை ஒரு மணிக்கு ஷை சங்கம் கூடி ஆண் பெண்களான சிறுவர்களை முக்யமாகப் படிக்கச் செய்ய வேண்டுமென்றும் வகுப்பாளர்களுக்கு லாகிரிபான கள் சாராயம் சுருட்டு பீடி முதலியவைகளை நீக்கி வைக்கவேணுமென்றும் இன்னும் அநேக விஷயங்களையும்எடுத்துரைத்து வெகு விமரிசையாக நடத்தி கடவுள் வணக்கத்துடன் சங்கம் முடிவு பெற்றது என்று காரியதரிசி எம் முனுசாமி எழுதுகிறார்.

மதிப்புரை

கைவல்லிய நவநீதம் என்னும் புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். மதுரை திரு பி. எம். சாமிநாத பிள்ளை அவர்கள் இந்நூலுக்குப் பதவுரையும் கருத்துரையும் வெகுதெளிவாக எழுதப்பெற்றதும் தத்துவ விளக்கப்படலம் கவி 108ம் சந்தேகந்தெளிதல் படலம் கவி 180ம் ஆகக் கவிகள் 288ம் 242 பக்கங்களில் விளக்கவேண்டியவைகளை விளக்கியும், விரிக்கவேண்டியவைகளை விரித்தும் செய்யுள் முதற் குறிப்பு அகராதியுடனும், பிழை திருத்தங்களுடனும் இந்நூல் ஆசிரியரின் மாணாக்கர் அடைந்த அநுபூதியை விளக்கல் என்னும் 5ந்து பாக்களும் படிப்பவர் மனதிற்கு இன்புறச் செய்வதோடு பசுபதிபாச விலக்கணங்களை அநுபவகாலத்தில் ஏகோபித்துக்காட்டி மக்களை உய்விக்கச்செய்யும் ஓர் நூலாக விளங்குகிறதென்றும் அபிப்பிராயப்படுகிறோம்.

இதன் விலை ரூ 1—8—0

கிடைக்குமிடம்

பி. எம். சாமிநாதம் பிள்ளை அவர்கள்

மேற்கு வாசல்

மதுரை

மற்றும் மதுரை புஸ்தகக் கடைகளிலெல்லாம் கிடைக்கும்.

தமிழ் மக்களுக்கோர் எச்சரிக்கை!

மத்திய ஆசியாவிலிருந்து புத்தம்புதிதாய் நம் நாட்டுக்கு புகுந்த சில பார்ப்பன மக்கள் இது வரை செய்த இன்னல்கள் போதாதென ஆடு நனைகிற தென ஓநாய் அழுததொப்ப "தமிழ்ப் பல்கலை கழகம் வரப்போகிறதே" அதற்குரிய தமிழ் நூல்கள் வெளிவரவில்லையே? எனத் தமிழ் மொழியின் ஆதரவு கருதி வெளியிடுவான் போன்று பல நூல்கள் ஆங்கிலத்தினின்று மொழிபெயர்க்கின்றன.

இத்தகையர் நம் நாடு, வீடு, காடு, மேடு, காடுபடுதிரவியம், மலைபடுதிரவியம், கடல்படுதிரவியம், நம் மொழி, நம் நாகரீகம், முதலிய யேனைய எல்லாவற்றையும் கொள்ளை கொண்டு பல சீர்கேடு கொள்ளை கொண்டதென தமிழ் மக்கள் விழித்திருக்கும் இக்காலத்தும் தமிழ்மொழி பெயர்ப்பென வடமொழிப் பதங்களை ஆங்கிலத்திற்கிணையாக்கி வெளியிடுகின்றனர் இவை ஆங்கிலம் கற்பதை விடத் தமிழ் மக்களுக்கு எவ்வளவோ இன்னல்கள் விளைவிப்பனவாயுள்ளன இதன் சூழ்ச்சிகளை முழுதுமறிய விரும்புவோர் மார்ச்சு, எப்ரல், மாதத்திய ஹிந்து பிரதியை பார்த்தால் தெரியும். பாடசாலைகளிலோ வட மொழி புகுத்திய தமிழ் புத்தகங்களையே பாட புத்தகங்களாகக் காரிய வகுப்பினர் புகுத்துகின்றனர் ஆதலால் தமிழ்மக்களே தாயைப்போற்றும் தனிச்சொல் பெரியோரே விழிமின் எழுமின் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்புகள் செய்மின் தனித்தமிழ் புத்தகங்களையே வெளியிடுமின் பல்கலைக்கழகம் நிருவப் பெறின் புத்தகங்களை ஆராய்ந்து ஆதரியுங்கள் என்று வீரபத்திரர் எழுதுகிறார்.

[4-ம்பக்கத் தொடர்ச்சி]

மந்திரி சபையை அமைக்க மறுத்துவிடவே அரசாங்கத்திற்குத் திகைப்பு ஏற்பட்டு விட்டது.

அரசாங்கத்தாரை இத்தகைய நெருக்கடியான நிலைமையிலிருந்து விடுவிப்பதற்காகவேண்டி ஒரு புதுக்கட்சிசிருஷ்டிக்கப்பட்டது (நகைப்பு அதற்கு "சுயேச்சைக் கட்சி" என்று நாமகரணம் சூட்டப்பட்டது (வெட்கம் வெட்கம்) அக்கட்சியின் தலைவர் தான் மந்திரி சபை அமைப்பதாகச் சொன்னார். லார்டு கோஷன் துரையோ மகாசட்டதிட்டம் தெரிந்த கவர்னர் (நகைப்பு) ஜவாப்தாரித்துவமும் பொறுப்பும்வாய்ந்த அரசாங்கமுள்ள நாட்டிலிருந்து வந்த கவர்னரன்றோ? [வெட்கம் வெட்கம்] ஆதலால் கோஷன் துரையவர்கள் சட்டசபையில் கட்சிபலமில்லா மூவர்களைக்கொண்டு மந்திரி சபையை நியமித்து விட்டார் [வெட்கம் வெட்கம்.]

சீனிவாசய்யங்காரும் மந்திரி சபையும்

கட்சி பலமில்லாமலும் வேறு எந்த கட்சியினுடைய பலமுமிருக்கின்றதென்று தெரியாமலும் சட்ட திட்டம் வாய்ந்தவரென்றுசொல்லப்பட்ட கவர்னர் துரை சுயேச்சை மந்திரி சபையை நியமிப்பாரா? முடியவேமுடியாது. சுயேச்சை மந்திரிசபையை அமைப்பதற்கு திரு சீனிவாசய்யங்கார்தான் காரணமென்று நான் ருசிக்கமுடியும். [கேளுங்கள் கேளுங்கள்] இந்தப்பலத்தைக் கொண்டுதான் சுயேச்சை மந்திரி சபையை அமைப்பதில் தனக்கு யாதொரு பங்குமில்லை யென்று சொல்ல முடியுமா? வென்று சீனிவாசய்யங்காரை நான் பம்பாய்ப்பத்திரிகை பிரதிநிதிக்குப் பேட்டி கொடுத்தபோது கேட்டிருக்கிறேன். [கேளுங்கள் கேளுங்கள்] இதற்குப்பதில் கொடுத்த சீனிவாசய்யங்கார் நான் சொன்னது முழுப்பொய் யென்று சொன்னார்.

சுயேச்சை கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரொருவர் மந்திரி சபைக்குச் சீனிவாசய்யங்கார்தான் காரணம் என்று என்னிடம் சொல்லியிருக்கிறார். சுயேச்சைக் கட்சியில் சேரும்படி ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தன்னைக்கெஞ்சிக் கேட்டுக் கொண்டாரென்றும் இப்பொழுதும் சுயேச்சைக் கட்சியிலுள்ள எனது நண்பர் என்னிடம் சொல்லியிருக்கிறார். [வெட்கம்வெட்கம்துரோகம்மோசம் என்ற பலத்த கூச்சல்] அந்நண்பரின்பெயரைச் சொல்ல, நான்விரும்பவில்லை சீனிவாசய்யங்காரின் குட்டுகளையும், அவர்காங்கிரசுக்குச்செய்த மோசங்களையும் மிஸ்டர் பிரகாசம்அவர்கள்நன்கு எடுத்து உடைத்து உடைத்துப் புட்டுப்புட்டுக் காட்டி விட்டிருக்கிறார். [நகைப்பு] இத்தகையதான பலமில்லாமந்திரிசபையை எவ்வளவுசீக்கிரத்தில்முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் உடைத்தெரிவதன்றோகாங்கிரஸ் கட்சியின் யோக்கியத்திற்கும்தேசாபிமானத்திற்கும்அழகாகும்? (கேளுங்கள் கேளுங்கள்) மந்திரிகள் மூன்று பேரும் எனக்கு நெருங்கிய நண்பர்கள் தான். அவர்கள் நல்லமனிதர்களாயிருதது போலவே நல்லமந்திரிகளாகவுமிருப்பார்களென்று நம்புகிறேன் நகைப்பு ஆனால் காங்கிரஸ் கட்டளையைப்பார்க்கும்போது அம்மந்திரிசபையை உடைத்தெரிய வேண்டியதன்றோ யோக்கியமாகும்? அதைவிட்டு, மந்திரி சபையை உடைக்கச் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் நடுநிலைமை வகித்திருந்து விட்டதால் சென்னைக்காங்கிரஸ் கட்சியினர்கள் காங்கிரசையும் மகாஜனங்களையும் மோசம் செய்து விட்டார்கள் மந்திரிசபையும் உயிர்வாழ்ந்திருக்கிறது அதனால்இம்மாகாணத்திலிம்மட்டுமன்று இந்நாடுமுழுதிலும் மனத்தாங்கலும் மனக்கொதிப்பு மேற்பட்டிருக்கிறது.

சென்னைக் காங்கிரஸ்கட்சியின் போய் 'சமாதானம்'

மந்திரிசபையை அமைப்பதில்லை என்று ஜஸ்டிஸ் கட்சியினர் வாக்குத்தத்தம் செய்ய மறுத்துவிட்டதால் தான் தாங்கள் மந்திரி சபையைத் தோற்கடிக்க முடியாது போயிற்றென்று சென்னைக் காங்கிரஸ் கட்சியினர் சொல்லுகின்றனர்.

தங்கள் மோசடிக்கு இது ஒரு சமாதானமாகும் அரசியல் விரோதிகளாயிருப்பவர்கள் தங்கள் திட்டத்தை பூர்த்தியாக நடத்திக்கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்ட காரணத்தால் தான் காங்கிரஸ் வாதிகள் தங்கள் திட்டத்தையே கைவிட்டு விட்டார்களாம் [வெட்கம் வெட்கம்] தம்திட்டத்தை நிறைவேற்ற தமது அரசியல் விரோதிகள் எவ்வாறு உதவிசெய்வார்கள்? [நகைப்பு] இதனால் தான்காங்கிரஸ் கட்டளையை மீறிவிட்டோமென்ற சொல்பவர்களை போக்கியர்களென்னலாமா? [வெட்கம் வெட்கம்] அடுத்தபடியாக மற்றொரு சமாதானம் சொல்லுகிறார்கள் இம்மந்திரி சபையை ஒழித்து உடைத்துவிட்டால் இச்சட்டசபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தவேண்டுமென்பனகால்ராஜாவர்களுக்கு போதனை சொல்லிக்கொண்டிருப்பது. இன்னும் அரசாங்கத்தில் பனகால் ராஜாவுக்குச்செல்வாக்கிருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டாலுங்கூட, மறு தேர்தலைப்பற்றி ஏன் காங்கிரஸ்காரர்கள் பயப்படவேண்டும்? காங்கிரஸ் கோரியது அதானே? [கேளுங்கள் கேளுங்கள்] வங்காளத்திலும் மத்திய மாகாணத்திலும் இத்தகைய சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று தானே காத்துக்கொண்டிருக்கின்றனர்? இத்தகைய சந்தர்ப்பத்தைப் பெறும் பாக்கியம் காலஞ்சென்ற தலைவர் சி. ஆர். தாஸ் அவர்களுக்குக்கூட கிடைக்கவில்லையே? சட்டசபைக்கலைக்கப்படுவதின் மூலம் தான் தேசமக்களுடையதும் தேச மகா சபைகளாகிய காங்கிரஸினுடைய வல்லமையும் அதிகாரமும் அரசாங்கத்தாருக்கு விளங்குவதுடன் இரட்டை ஆட்சியின் புரட்டுகளும் அபஜெயமும் வெளியாகும். இத்தகைய பெருங்கீர்த்தியைக் கைவிட்டு விட்டு சமாதானங் கூறிக்கொண்டிருக்கும் தலைவர்களை என்னவென்றழைப்பது [வெட்கம் வெட்கம்]

காரியக்கமிட்டியின் மோசடி.

காரியக்கமிட்டி அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டிக்கு அடங்கியதாகும். அவ்வாறிருந்தும், காங்கிரஸின் காரியதரிசியாய் விளங்கும் எ. ரங்கசாமி அய்யங்கார் காரியக்கமிட்டி செய்ததை ஆதரித்துப்பேச ஆரம்பித்து விட்டார் [வெட்கம்] அப்படித்தான் காரியக்கமிட்டிக்கு அதிகாரமிருப்பதாக வைத்துக்கொண்டாலும் இருகட்சியினரையுமன்றோ விசாரித்துத்தன்தீர்ப்பு சொல்லியிருக்க வேண்டும் [வெட்கம் வெட்கம்] ஒரு கட்சியினரை மட்டும் விசாரித்துத் தீர்ப்பு சொல்லும் நியாயாதிபதிகளை நாம் கண்டதுமில்லை கேட்டதுமில்லை [வெட்கம் வெட்கம்] ஆனால்முன்னொரு காலத்தில் அட்வகேட் ஜெனரலாயிருந்த திரு சீனிவாச அய்யங்காருக்கு ஒரு கட்சியை விசாரித்தே தீர்ப்புச் சொல்லிவிடும் சக்தி இருக்கலாம் [நகைப்பு வெட்கம் வெட்கம்] இவ்வளவுவல்லமையும் சட்டஞானமும் படைத்த அட்வகேட் ஜெனரலைப்பெற்றிருந்த சென்னை அரசாங்கத்தின் பாக்கியந்தானென்னே? ஆகலின் காரியக்கமிட்டிக்கு இவ்விஷயத்தில் தீர்ப்புச்சொல்ல யாதொரு அதிகாரமுமில்லாதிருப்பதுடனும் எதிர்கட்சியை விசாரிக்காமலேயே போனதும் பெரிய அநியாயமாயிருப்பதுடனும், காங்கிரசின் முக்கியதீர்மானங்களுக்கு நேர்விரோதமாகவு மிருந்தது [கைதட்டல்].

ஸ்ரீமானின் பங்கு.

நண்பர்களே சுயேச்சை மந்திரி சபையின் அமைப்புக் கர்த்தா காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தான். அன்று பம்பாயில் சொன்னேன் இதை மறுத்து அய்யங்கார் இன்னும் தக்கபதிலொன்றுங் கூறவில்லை ஆதலால் நான் சொன்னதில் உண்மையிருக்கிறதென்று நீங்கள் அறிந்து கொள்ளலாம். [நகைப்பு]

ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் குட்டுகளையெல்லாம் திரு. டி. பிரகாசம் சொன்னபோது அவரைப்பற்றி ஐயங்கார் ஒன்றும்சொல்லவில்லை ஆனால் அதே விஷயத்தை நான்சொன்னபோது நான் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து கொள்ளத் தயாராயிருப்பதாக திரு ஐயங்கார் சொல்லுகிறார். [வெட்கம் வெட்கம்]

மற்றும் நான் இம்மாதிரியெல்லாம் பேசுவது தனக்கும் இந்தியா சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களுக்கும் யாதொரு ஆச்சரியத்தையும்விளைவிக்கவில்லை யென்று சொல்லுகிறார். இந்தியா சட்டசபையிலுள்ள மற்றைய அங்கத்தினர்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்றும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரை பற்றி என்ன நினைக்கிறார்களென்பதைப் பற்றியும், தெரிந்து கொள்ளவேண்டுமானால் இந்தியா சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஜூரியை ஏற்படுத்தி விசாரணைசெய்யட்டுமென்று நான் சொல்லுகிறேன் [நகைப்பும் பெருத்தகைதட்டலும்] ஒரு மனிதனைக்குற்றவாளியாக்க வேண்டுமானால் அவன் ஜஸ்டிஸ் கட்சியான் என்று சொல்லிவிட்டால் போதும் என்று சீனிவாசய்யங்கார் மனப்பால் குடித்துக்கொண்டிருப்பது போல் தோன்றுகிறது [வெட்கம் வெட்கம் நகைப்பு கைதட்டல்.]

நாட்டிற்கு ஆபத்துஎன்பது திரு. ராஜாவினாலா? திரு. ஐயங்காராலா?

பனகால் ராஜா மந்திரியாய் வந்தால் தீங்குகள் பல விளையுமென்று சொல்லப்படுகிறது [நகைப்பு] ஆனால் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரோ பொது ஜன வாழ்க்கைக்கே பெரிய ஆபத்தாய் விளங்குகிறார் என்று சொல்லுகிறேன். [பெருத்த கைதட்டல்] பம்பாயில் நான் பேசியபோது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற வார்த்தையைக்கூட சொல்லவில்லை. நான் பேசியதெல்லாம் திரு. சீனிவாசய்யங்காரின் நடத்தையைக் குறை கூறியதே ஆகும். அப்படியிருந்தும் நான் பார்ப்பனரைத் தவேஷிக்கிறேனென்றும் வகுப்பு வாதியென்றும், ஜஸ்டிஸ் கட்சியில் சேரப்போகிறேனென்றும் சொல்லப்படுகிறது. இதிலிருந்து விளங்குவதென்ன? ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தான் பிராமணர்களுடையவும் பிராமணீயத்தினுடையவும் அவதாரமென்றும் தலைவரென்றும் விளங்கவில்லையா? [வெட்கம் வெட்கம்]

நண்பர்களே ஸ்ரீமானின்வகுப்பபிமானத்தைப் பற்றி இரண்டே உதாரணங்கள் சொல்லவிரும்புகிறேன். ஒன்று தேர்தலுக்குப் பிந்தியது. இந்தியா சட்ட சபைக்குத் தமிழ் ஜில்லாக்களின் சார்பாக நிறுத்தப்பட்ட 6 அபேட்சகர்களில் 5 பேர் ஐயங்கார் பார்ப்பனர்களே [வெட்கம் வெட்கம்]

இச் சமயத்தில் ஒரு பார்ப்பனர் கூச்சல் போட்டுக் குழப்பம் விளைவிக்க முயற்சி செய்தார் குழப்பம் அடங்க 15 நிமிஷம் பிடித்தது) தலைவர் திரு. ஷண்முகம் முதலியவர்கள் பிரவேசிக்காவிட்டால் அப் பார்ப்பனரைக் கூட்டத்தினர் அடித்துத் தொந்திரவு செய்திருப்பார்கள்.

நான் ஒருவன் தான் பார்ப்பனரல்லாதான். என்னுடைய தொகுதிக்கும் ஒருஐயங்காரையே நிறுத்துவதென்று யோசனை செய்ததாகக்கூடத்தெரிகிறது. [வெட்கம் வெட்கம்] சீனிவாசஐயங்காரின் வகுப்புணர்ச்சிக்கு இது ஒரு உதாரணமாகும். மற்றொரு உதாரணத்தை சொல்லுகிறேன்.

எங்கும் பார்ப்பன மயம்.

மிஸ்டர் நரசிம்மராஜூ சட்டசபைத் தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக்கொண்ட பின்பு சென்னைச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குத்தலைவர் வேண்டியிருந்தது. எந்த ஜனநாயகக் கட்சியிலும் போட்டியின்றியேதான் தன் தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கம். ஆனால் வகுப்பு

ணர்ச்சியையே கொன்றுவிட்டதாகப் பெருமை பேசிக்கொண்ட கட்சியில் போட்டி ஏற்பட்டு விட்டது. கடைசியில் திரு சத்தியமூர்த்தியைத் தோற்கடித்து திரு சாமி வெங்கடாசலம் செட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த நாள் தன் தலைவர் ஸ்தானத்தை ராஜீநாமா செய்துவிட வேண்டுமென்ற சாமி வெங்கடாசலம் செட்டி நிர்ப்பந்தப் படுத்தப்பட்டாரெனத் தெரிகிறது. [வெட்கம் வெட்கம்] ஆனால் வெங்கட்டாசலம் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது, அதன்பின் திரு கோட்டிரெட்டி தன் டெபுடி பிரசிடெண்ட் வேலையை விட்டுவிடும்படி நிர்ப்பந்திக்கப் பட்டதாகத் தெரிகிறது திரு கோட்டிரெட்டியும் விட்டு விட்டார். சத்திய மூர்த்திக்கு வேலை வேண்டுமானால் மற்றொரு டெபுடி பிரசிடெண்டான திரு சி. வி. வெங்கடரமணய்யங்காரை ஏன் ராஜீநாமா செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கலாகாது? [வெட்கம் வெட்கம்] இது வகுப்புபிமானமல்லவென்றால் வேறெதுதான் வகுப்பபிமான மென்றுகேட்கிறேன்? [கேளுங்கள் கேளுங்கள்].

ஸ்ரீமானின் கோஷ்டியை விரட்டுவோர்

நான் காங்கிரசிலிருந்து விலகி ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிடப் போகிறேன் என்று ஸ்ரீனிவாச ஐயங்கார் சொல்லுகிறார். இதைக்கேட்டு நானும் பயப்படப் போவதில்லை. வேறு யாரும் பயப்படப்போவதில்லை. ஸ்ரீமான் கோஷ்டியார் செய்யும் அக்கிரமங்களைச் சொல்லுபவர்களையெல்லாம் காங்கிரசிலிருந்து விரட்டிவிட்டு ஏகபோகமிராசாகக் கேட்போரற்று ஏதேச்சாதிகாரம் செய்யலாம் என்று ஸ்ரீமான் நினைக்கிறார் போலும்! அது இனி நடவாது: லார்ட் பர்க்கன்ஹெட் கன்சர்வேடிவ் கட்சியினின்றும்விலகப்போகிறேனென்றகன்செர்வேடிவ் கட்சியிலுள்ள அவருடைய விரோதிகள் சிலர்சொன்னபோது நான் கன்சர்வேடிவ் கட்சியிலிருந்து விலகப் போகிறேன்?கன்சர்வெடிவ் கட்சியிலுள்ள அயோக்கியர்களையெல்லாம் நான் விரட்டப் போகிறேன் என்று பார்க்கன் ஹெட் சொன்னார் அது போன்றே நானும் ஸ்ரீமான் கோஷ்டிக்குச் சொல்லுவதென்ன? நானா காங்கிரசை விடப்போகிறேன் ஸ்ரீமானைப்போன்ற அயோக்கியத் தலைவர்களையெல்லாம் நான் காங்கிரசிலிருந்து விரட்டியடிக்கப் போகிறேன். என்று சொல்லுகிறேன். [கேளுங்கள் பலத்த கைதட்டல்] இப் புண்ணிய கைங்கர்யத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

நண்பர்களே இப்படிப்பட்ட தலைவர்களிடமிருந்து நாம் காங்கிரசையும் நாட்டையும் விடுவிக்க வேண்டுவது மிக அவசியம் இல்லையேல் சுயராஜ்யம் பார்ப்பனரல்லாதாரெல்லாம் காங்கிரசில் சேரவேண்டுமென்று நான் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். [கை தட்டல்] அப்பொழுது தான் காங்கிரசை அயோக்கியர்களின் கையிலிருக்கும் பித்தலாட்டக்காரர்களிடமிருந்து மீட்க முடியும். [பெருத் கைதட்டல்] (திராவிடன்)

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை சுயராஜ்யம் வயிற்றுச் சோற்று உரிமை."



காகி நாடா சேலை

16 முழ நீளம் $2\frac{1}{2}$ முழ அகலம

இது பார்வைக்கு மிகவும் சோத்தியாகவும் சுற்றிலும் பூக்கொடிகள்போட்டு மத்தியில் பெரிய பூக்கள் உள்ளது விலை ரூபாய் 5—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி
பார்க்டவுன், மதராஸ்.

சேலம் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்.

முதன் மந்திரியால் மூன்று முறை நிறுத்தப்பட்டது.

சேலம் ஜில்லா போர்டு மெம்பர் திரு ராஜமாணிக்கம் பண்டாரம் முதல் பேர் சென்னை கவர்னரின் அந்தரங்க காரியதரிசிக்கு அனுப்பிய தந்திச் செய்தி.

ஜில்லா போர்டு தலைவராயிருந்த திரு போல்க்ஸ் தலைவர் பதவியை ராஜிநாமா செய்யப் போவதாக அறிவித்தவுடனே லோக்கல் போர்டு ஆக்டு 17-வது விதியின் படி மார்ச்சு 31-உ வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க ஒரு கூட்டம் கூட்டும்படி தீர்மானிக்கப்பட்டது. திரு போல்ஸின் ராஜிநாமாவை ஒப்புக்கொண்ட பிறகு அந்தக் கூட்டத்தில் தானே மறு தலைவர் தேர்தலையும் நடத்தவேண்டுமென்று மந்திரி உத்தரவு கொடுத்தார். அந்த உத்தரவுபடி, திரு போல்ஸின் ராஜிநாமாவை ஒப்புக்கொண்ட கூட்டத்திலேயே ராவ்பகதூர் எல்லப்பசெட்டியார் ஏகமனதாக எல்லோராலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் தேர்தல் முடிவை 6-வாரம் வரை கெஜட்டில் பிரசுரம் செய்யாமல் மந்திரி நிறுத்தி வைத்தார். மே 15தேதி திரு எல்லப்ப செட்டியார் தேர்தலை ரத்துசெய்து உடனே வேறு தேர்தல நடத்தவேண்டுமென மந்திரி உத்திரவிட்டார். இரண்டாம் முறையும் அவர் உத்தரவுப்படி நடத்தப்பட்டது. மே 23-உ தேர்தல் நடத்துவதாக ஒரு வாரத்துக்கு முன்னதாகவே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. மே 22 தேதி மந்திரி மீண்டும் தேர்தல் நோட்டீசை ரத்துசெய்து நோட்டீஸின் போக்குவரத்துக்கு 2 நாளும், சட்டப்படி கூட்டத்துக்கு முன் 7 நாளும் ஆக 9 நாள்களுக்கு முன்னாலேயே தேர்தல் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டார். மூன்றும் முறையும் அவரது உத்தரவு அனுசரிக்கப் பட்டது. ஜூன் 4 தேதி தேர்தல் நடத்துவதாக குறிப்பிட்டு 11 நாளைக்கு முன்னாலேயே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஜூன் 3 தேதி தேர்தலையும் மந்திரி ரத்துசெய்து, போர்டு மெம்பர்களில் ஐந்துபேர் போர்டுகண்ட்ரூக்டில் சம்மந்தப்பட்டிருப்பதாக எதிர் கட்சியார் அனுப்பியிருக்கும் மனுவை விசாரித்து முடிவுசெய்த பிறகு தேர்தல் நடத்தினால் போதுமென்று ஒரு உத்தரவு அனுப்பினார். வைஸ் பிரசிடெண்டு அந்த உத்திரவை போர்டு மீட்டிங்கில் ஆஜராக்கினார். ஏதோ தப்பெண்ணத்தின்பேரில் அந்த உதிரவு அனுப்பப்பட்டிருக்கவேண்டுமென்றும் அதைப் புனராலோசனை செய்ய ஸர்க்காரிடம் விண்ணப்பம் செய்துகொண்டு தேர்தலை அன்று நடத்தவேண்டுமென்று போர்டு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி தேர்தல் நடந்தது. ராவ்பகதூர் எல்லப்ப செட்டியார், எம். எல். ஸி. மீண்டும் ஏகமனதாகத் தேர்ந்தெடுககப்பட்டார். இவ் விஷயங்களை விளக்கி ஜூன் 5 தேதி கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. மீண்டும் மந்திரி இவ் விஷயத்தில் குறுக்கிடக் கூடுமென்று வதந்தி உலாவுகிறது. நான்கு தாலூகா போர்டு மெம்பர்களும், 6 டிஸ்டிரிக்டு போர்டு மெம்பர்களும் உள்பட பத்துபேர் கவர்னரவர்களைப்பேட்டிகாண உத்திரவு வாங்கித்தாரவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

[3ம் பக்கத்தொடர்ச்சி]

கும் இந்தக்காலத்தில் எதைத் தீர்ப்பதற்காக இந்த வர்ணாஸ்ரமதர்மம் நமது நாட்டில் இருக்கிறது? இந்த வர்ணாஸ்ரமதர்மக் கொடுமையின் பாவத்தைத்தீர்ப்பதற்கே கடவுள் மகமதியர்களை அனுப்பினர். அதிலும் நமக்கு நல்ல குணமும் புத்தியும் வரவில்லை. பின்னால் கிருஸ்தவர்களையனுப்பினர். அதிலும் நம் கெட்ட குணம் நம்மை விட்டு நீங்கவில்லை. இனி கடவுள் என்ன செய்வாரென்பது தெரியவில்லை. கிருஸ்துவர்களும், மகமதியர்களும் தாழ்த்தப்பட்டவர்களைத் தங்கள் தங்கள் மதத்தில்சேர்த்துக்கொள்ளச் செய்யும் முயற்சியில் அதிதீவிரமாக இருக்கிறார்கள். எல்லோரையும் தங்கள் மதத்தில் சேர்த்து மதத்தை விர்த்தி பண்ணுவது அவர்கள் மததர்மம். வருணாசிரமமேற்படுத்தி வித்தியாசம் செய்து அடிமைப்படுத்தி அழிப்பது நம் மதத்தர்மம். இந்த உலகத்தில் என்னென்ன மாறுதல்கள் நடந்து வருகின்றன என்பதைக் கவனித்துப்பார்; கலியுகத்தில் குதிரையாக இருந்த நீராவியை இப்பொழுது மின்சார சக்தி கண்டு நகைக்கிறது. கண்ணுக்கெட்டாதிருந்த பரமாணு இப்பொழுது மனதுக்கெட்டாதென்ற சித்தாந்தம் உண்டாயிருக்கிறது. கெந்தர்வர்களைப்போல் மனிதன் சிறகு முளைத்துப் பறக்கிறான். வானத்தில் இடம் உனக்கா எனக்காவென்றுநீதிஸ்தலத்தில் வியாச்சியங்கள் விரைவாக வரக்கூடிய காலத்தை வக்கீல்கள் எதிர்பார்க்கிறார்கள். ஒரே நாள் இரவில் சீனர் எல்லாரும் பன்றிக் குடுமியை நறுக்கி எறிந்தனர். ஐந்நூறு வருடத்தாவுதலை ஜப்பான் ஐம்பது வருடத்தில் தாவிவிட்டது. துருக்கி முகமூடியை எடுத்தெறிந்து இங்கிலீஷ் டொப்பியை மாட்டப் புறப்பட்டு விட்டது. நம் நாட்டில் காப்பிக்கடை பல எச்சிலைக்குடிக்காவும் பக்கத்துவீட்டுத் தண்ணீரைக்குடிப்பதில் சண்டை ஒழிய வில்லை. பிராமணன் ஒருவன் மேக வியாதியோடு கூடி குடத்தில் கொண்டுவரும் ஜலம் அழுக்காக விருப்பதால் குடிக்கக்கூடாதென்றும், பறையன் ஒருவன் சுத்தமாகக் காச்சி வடிகட்டிக்கொண்டுவந்த நீர் சுத்தமாக இருப்பதால் குடிக்கத்தகுமென்று "குடி அரசு" சொன்னால் நம் வருணாச்சிரம தர்மம் ஒத்துக்கொள்ளுமா? ஆகவே இந்தச் சாஸ்திரம் நாட்டைக் கெடுத்தது போதும். இனியாவது நன்றாகப் பிழைப்பவர்களைப் பார்த்து வாழலாமென்று "குடி அரசு" சொன்னால் வகுபபுத்துவேஷமாகுமா? பிராமணத்துவேஷமாகுமா? தன்னயத்தை ஒழித்து ஞானமும், அன்பும் பெற்று அவற்றை பிறருக்கு அளிக்க உழைப்பவனே பிராமணன். அந்தக் குணத்திற்குத்தான் பிராமணன் என்று பெயர். பிரவியிலே பிராமணனென்றும், அவன் எப்படி நடந்தாலும், அவன் என்ன செய்தாலும் பிராமணனே தான் என்றும் எந்தச் சாஸ்திரமும் சொல்லவில்லை. இன்று நேரமாகி விட்டது நாளை ஞாயிற்றுக்கிழமை பேசுவோம்.

சேலம்
நார்பட்டுப் புடவைகள்

சாயம் கெட்டி! **விலை சரசம்!!**

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட அழகிய பளபளப்பான கண்களைக் கவரும் பல கலர்களில், பிளோன்களிலும், கறைகளிலும் பேட்டு வைத்தும், உடலில் பவளக்கொடி, நந்து கம்பிகளிலும் தயார் செய்யப்பட்ட 2½ முழம் அகலமும் 18 முழம் நீளமுமுள்ள பலகலர்களில் சேலைகளும், 2 முழம் அகலம் 12முழம் 14முழம் சேலைகளும், 30 அல்லது 33 இன்ச் அகலம் 9 கெஜம் நீளம் பல கலர்களில் பல ரகங்களில் பாவாடைகளும், 7 கெஜம் நீளம் 1 கெஜம் அகலமுள்ள பலவித சித்தாடைகளும், ஜாக்கட், சர்ட், ரவிக்கை ரகங்களும், பட்டு வேஷ்டி 5 முழம் முதல் 6 முழம் வரையிலும், சாதா பிளோன். சன்னகம்பி வைத்தும் கராச்சி பேட்டு வைத்தும், இன்னும் நார் பட்டுகளில் சம்பந்தமான அநேக ரகங்களும் கோசர்ஜான் புடவைகளும் தயார்செய்கிறோம். நூல் ரகங்களிலும் தயார் ஆகிறது. தேவைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிவிலை விபரம் தெரிந்து கொள்ளலாம்.

(மெடல் சர்ட்டிபிகேட் பெற்ற)
K. R. Chinnasamy Chetty.
Sidda Chetty & Co..
Artificial Silk Cloth Merchant, Gogai Salem. (S. India)

அகஸ்தியர்
தாது சஞ்சீவி லேகியம்.

மிருந்த பலத்தையும் வீரிய விருத்தியும் சரீர புஷ்டியும் உண்டாக்குவதுடன் இந்திரியஸ்கலிதம், நரம்புத்தளர்ச்சி, அஜீர்ணம், மலபந்தம், பித்தமபக்கம், பசியின்மை, கைகால் அசதி, இடுப்புவலி முதலான துர்க்குணங்களை, நிவர்த்தித்து சரீரதிடகாத்திரம் உண்டாக்கும்.

10-பலம் லேகியம் டின் 1-க்கு விலை ரூபாய் 2.
தபாற் செலவு— அணா 6.

டி. என். ஜி. பிள்ளை,
பெரிய கடைவீதி, திருச்சி.

சேலம் மாம்பழம்.

தினசரி நிலவரத்திற்கு முதல்தரமாக பொருக்கி எடுத்தனுப்புகிறேன். முதல்தாம் குறிப்பிட்ட ஸ்டேஷனுக்கு பாக்கிங் அண்டு ரெயில்சார்ஜ் சேர்ந்து 100 க்கு ரூ. 7. 2-ம் தாம் 100 க்கு ரூ. 5, ஒட்டுமாங்கன்று சீமை காய்கறி புஷ்பவிதைகளுடைய 1927ஆம் வருஷத்திய கேட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரிதோட்டம் சேலம்.

சந்தா நேயர்களுக்கோர் அறிவிப்பு

நாம் இதுவரை வெளியூர்களில் சந்தா பணம் வசூலிக்கவாவது, விளம்பரப்பணம் வசூலிக்கவாவது ஒரு ஏஜண்டுக்காவது அதிகாரம் கொடுக்கவில்லை. இப்படி இருக்க "குடி அரசி"ன் பெயரைச் சொல்லி சந்தா சேர்ப்பதாக நேயர்களிடமிருந்து பணம் வசூலித்து விடுகிறார்களென்று கேள்விப்படுகிறோம். ஆகையால் நேயர்கள் யாரிடமாவது பணத்தைக் கொடுத்து விட்டு எமது காரியாலயத்திலிருந்து பத்திரிகையை எதிர்பார்க்க முடியாது. ஆகையால் இவ்வித அசம்பாவிதங்களுக்கு நேயர்கள் ஏமாந்து போகாமல், சந்தாதொகை முதலானதுகளை நேரிலேயே அனுப்பி விடுமாறு வேண்டுகிறோம்.

மானேஜர்
"குடி அரசு", ஈரோடு.

புத்தக விளம்பரம்.

திகம்பர சாமியார் பால்ய லீலை	அணா	12
தமிழ் வியாசங்கள்	,,	9
ராம்மோகனன் & கங்காதரன்	,,	7
ஹம்ஸதேவி & பெண்புத்தி பிரகாசிகை	,,	4

ஆனந்த நிலையம் திருச்செங்கோடு.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணனஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது ஜனன நேரத்தையாவது தெரிவியுங்கள்.

சே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது.
விலை ரூபாய் ஒன்று.

ஜோதி சாஸ்திரம்

உபாத்தியாயரின்றி 30 நாளையில் ஜோதிஷம் கற்கலாம் எல்லா ஜாதகங்களுக்கும் பலன்கள் சொல்லக்கூடும். பஞ்சாங்கமின்றி எந்த ஜாதகமும் கணிக்கலாம். விலை ரூபாய் ஒன்று

மு. வடிவேல் செட்டி.
110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

ரப்பர் முத்திரைகள்.



1. தங்களுடைய மேல் விலாசம் ரபப்ர் ஸடாம்பு (குஷன்வைத்தது) ரூ. 2 8
2. கையெழுத்து ஸ்டாம்பு ... ,, 3 8
3. பித்தளை அரக்கு ஸீல ... ,, 2 0
4. வெள்ளி பித்தளை அரக்கு ஸீல் ,, 3 12

நேயர்களே! வேலைப்பாடு அழகாகவும் திருப்தியாகவும் இருக்கவேண்டுமானால் அநேக வருஷத்திய அநுபவமுடைய எங்களிடமே உங்களுடைய ஆர்டரயனுப்புங்கள். ஸ்ரீதனம் கம்பெனி,
ஜார்ஜ்டவுன், மதராஸ்

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

அமெரிக்கன் ஸில்க்.

துய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

இலவம் பஞ்சிற் றுயில்.

மெத்தைக்கு இலவம் (சில்க்) பஞ்சு வெளியூர்களுக்கு குறித்த காலத்தில் அனுப்ப முடியும். மொத்தமாய் வாங்கினால் விலை சரசம்.

சி. சுப்பைய முதலியார்
மண்டி
கோயமுத்தூர்.

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல், வயிற்றுவலி, சதை வளர்ச்சி, முதலியவற்றைத் தீர்க்கும், அமிர்த சஞ்சீவி. லேட்லாக் இனும். விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலயம் திருச்செங்கோடு.

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலயம், திருச்செங்கோடு (S. I.)

தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

கதர்! கதர்!! கதர்!!!

எல்லாம் திருப்பூர் கதர்

கதர் பனியன்கள் கதர் சேலைகள்

கதர் வேஷ்டிகள்

முதலான எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

மா. வெ. கருப்பண செட்டியார்,
கதர் வியாபாரம்,
திருப்பூர். (தென்னிந்தியா.)

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

பெட்றோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

சர்வமேக சம்ஹாரி.

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தடிப்பு, முதலிய மேகம் இருபத்தொன்றையும் ஒரு வாரத்தில் குணப்படுத்தும். ஒரு வார மருந்து விலை ரூ 2. வி. பி. வேறு கேட்லாக் இனும்

ஆனந்த நிலயம் திருச்செங்கோடு. (S. I.)

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மேட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும் தேர்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

தாய்மார்கள் கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம், எம்மதஸ்தாரும் வாங்கலாம், அனுபவிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—சாத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:— எ. எஸ். எ. மாந்திரீக டாக்டர்
இனும்தார் வீடு,
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும், வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கைஇதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் எரியவும் நிறுத்தவும் செயலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளானஜனங்கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடிவிடுவார்கள், மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பபபடும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி. மதராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.